# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

# மதிப்பீட்டு அறிக்கை

# 72 - தமிழ்




ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

# மதிப்பீட்டு அறிக்கை

# 72 - தமிழ்

ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**முழுப்பதிப்புரிமையுடையது.**

**தமிழ்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2016

**நிதி அனுசரணை**

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை
கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB)

# அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம்நிலைக் கல்வியின் இறுதிச்சான்றிதழ் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம்நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவுமட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப்பரீட்சையின் முக்கியநோக்காக இருந்தபோதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில்பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவுசெய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப்பரீட்சையாகவும் தேர்வுப்பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம்நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2016 ஆம் ஆண்டில் 211 865 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 46 328 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவுசெய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சிசெய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும்பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப்பொறுப்புக் கல்விப்பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) தமிழ்ப்பாடத்தின் நோக்கம், பாடஅடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளன. இப்பகுதியில் பாடத்திற்குத்தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ளவிதம், மாவட்டமட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ளவிதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாடஅடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் தமிழ்ப்பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டவிதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ளவிதம் என்பனபற்றி விரிவாகக் குறிப்பிடும் பாடஅடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2016 பரீட்சையில் தமிழ்ப்பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும்திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள், பாடஅடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதமபரீட்சகர், மேலதிக பிரதமபரீட்சகர், உதவிப்பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபுரீதியான சோதனைக்கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித்துலங்கல் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொருவினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள், கற்றல்-கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையின் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சிமட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணைபுரியும் என நம்புகின்றேன். **எதிர்காலத்தில்** தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதமபரீட்சகர்கள், மேலதிக பிரதமபரீட்சகர்கள், உதவிப்பரீட்சகர்கள், ஆர்வத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இத்தொகுப்புக்கான நிதிஅனுசரணை வழங்கிய எதிர்கால அறிவை மையமாகக்கொண்டு பாடசாலைக் கல்விமுறைமையை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2017 டிசம்பர் 01

ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | பீ. சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு / அபிவிருத்தி, மதிப்பீடு) |
| இணைப்பும் தொகுப்பும் | - | எம் . ஜீவராணிபுனிதா<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர்<br>(பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு) |
| மொழிப்பதிப்பு | - | துரைசாமி இராஜேந்திரம்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு நிலை)<br>திறந்த பல்கலைக்கழகம்<br><br>சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு நிலை)<br>இலங்கை பரீட்சைத் திணைக்களம் |
| ஆக்கக்குழு | - | ம. இரங்கநாதன்<br>ஆசிரியர்<br>யா/இடைக்காடு ம.வி.<br>அச்சுவேலி<br><br>க. மனோரஞ்சன்<br>ஆசிரியர்<br>மு/வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை<br><br>சு. முரளிதரன்<br>ஆசிரியர்<br>யா/ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை<br><br>சி. இளந்திரையன்<br>ஆசிரியர்<br>கிளி/பூநகரி மத்திய கல்லூரி<br><br>ந. குகபரன்<br>ஆசிரியர்<br>கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்<br><br>க. குணரத்தினம்<br>ஆசிரியர்<br>யா/உசன் இராமநாதன் ம.வி<br><br>இ. ஜெயமலர்<br>ஆசிரியர்<br>தி/அல் அஸ்ஹர் முஸ்லிம் ம.வி<br>திருகோணமலை. |
| கணினி பக்க வடிவமைப்பு | - | எஸ். றஹீனா ஹாசிம்<br>கணினி தரவுப் பதிவாளர் |
| முகப்பு அட்டை வடிவமைப்பு | - | வை. எஸ். அனுராதி<br>அபிவிருத்தி அலுவலர் |

# உள்ளடக்கம்

**பகுதி** I


**பக்க எண்**

1.0 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்**
1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1
1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**
1.2.1 பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2
1.2.2 பரீட்சார்த்திகளால் பெறப்பட்ட தரங்கள் 2
1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள் 3
1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 4

**1.3.** **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**
1.3.1 வினாப்பத்திரம் I இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 5
1.3.2 வினாப்பத்திரம் I இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 5
1.3.3 வினாப்பத்திரம் I - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 6
1.3.4 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 7
1.3.5 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 7
1.3.6 வினாப்பத்திரம் II - வினா 1 (அ) பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 8
1.3.7 வினாப்பத்திரம் II - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு 9

**பகுதி** II

2.0 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**
2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளித்தமை தொடர்பான விபரங்களும்**
2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 10
2.1.2 வினாப்பத்திரம் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள் 11
2.1.3. வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் 33

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**
2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 34
2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள் 35
2.2.3 வினாப்பத்திரம் II - பகுதி I எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 37
2.2.4 வினாப்பத்திரம் II - பகுதி I இற்கு விடையளித்தமை தொடர்பான பொதுவான அவதானிப்புக்கள் முடிவுகள், ஆலோசனைகள் 39
2.2.5 வினாப்பத்திரம் II - பகுதி I "அ" இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்) 44
2.2.6 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும். 63

**பகுதி III**

3.0 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**
3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 64
3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்** 65

## பகுதி I

## 1 பாடக்குறிக்கோள்களும் பாடஅடைவும்

### 1.1 பாடக்குறிக்கோள்கள்

- மொழிவழியாகத் தெளிவாகச் சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தொடர்பாடலுக்கும் வேண்டிய தேர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- இலக்கியத்தை விளங்கிக்கொள்ளவும் இரசிக்கவும் விமர்சனஞ்செய்யவும் வேண்டிய தேர்ச்சிகளை விருத்திசெய்துகொள்ளல்.
- பல்வேறு இலக்கியவடிவங்களின் அமைப்பை அறிந்து அவற்றுடன் தொடர்புடைய ஆக்கங்களைப் படைக்குந்திறனை வளர்த்துக்கொள்ளல்.
- தமிழ் இலக்கியவரலாற்றுப் போக்கினையும் அதன் பண்புகளையும் விளங்கிக்கொள்ளல்.
- அடிப்படை இலக்கணஅறிவை விருத்தி செய்துகொள்ளல்.
- இலக்கிய வழிவரும் மானுடப்பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு வளர்த்துக்கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்

### 1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களம் | - | - | - |
| தமிழ் | 11496 | 3365 | 14861 |
| ஆங்கிலம் | - | - | - |
| மொத்தம் | **11496** | **3365** | **14861** |

**அட்டவணை 1**

### 1.2.2 பரீட்சார்த்திகளால் பெறப்பட்ட தரங்கள்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்திகள் | | தனிப்பட்ட பரீட்சார்த்திகள் | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 634 | 5.51 | 32 | 0.95 | 666 | 4.48 |
| B | 1773 | 15.42 | 130 | 3.86 | 1903 | 12.81 |
| C | 3997 | 34.77 | 617 | 18.34 | 4614 | 31.05 |
| S | 3577 | 31.12 | 1222 | 36.32 | 4799 | 32.29 |
| W | 1515 | 13.18 | 1364 | 40.53 | 2879 | 19.37 |
| **மொத்தம்** | **11496** | **100** | **3365** | **100** | **14861** | **100** |

**அட்டவணை 2**

1.2.3 மாவட்டங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்ற தரங்கள்:

| மாவட்டம் | தோற்றியவர்களது எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர்கள் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர்கள் | | திறமைச் சித்தி (C) பெற்றவர்கள் | | சாதாரண சித்தி (S) பெற்றவர்கள் | | சித்தி (A+B+C+S) பெற்றவர்கள் | | சித்தி யடையாதவர் கள் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 250 | 3 | 1.20 | 30 | 12.00 | 65 | 26.00 | 115 | 46.00 | 213 | 85.20 | 37 | 14.80 |
| 2. கம்பஹா | 115 | 8 | 6.96 | 17 | 14.78 | 43 | 37.39 | 38 | 33.04 | 106 | 92.17 | 9 | 7.83 |
| 2. களுத்துறை | 163 | 11 | 6.75 | 30 | 18.40 | 55 | 33.74 | 50 | 30.67 | 146 | 89.57 | 17 | 10.43 |
| 4. கண்டி | 604 | 23 | 3.81 | 69 | 11.42 | 210 | 34.77 | 196 | 32.45 | 498 | 82.45 | 106 | 17.55 |
| 5. மாத்தளை | 135 | 11 | 8.15 | 26 | 19.26 | 45 | 33.33 | 45 | 33.33 | 127 | 94.07 | 8 | 5.93 |
| 6. நுவரெலியா | 932 | 77 | 8.26 | 159 | 17.06 | 324 | 34.76 | 306 | 32.83 | 866 | 92.92 | 66 | 7.08 |
| 7. காலி | 34 | 2 | 5.88 | 4 | 11.76 | 15 | 44.12 | 7 | 20.59 | 28 | 82.35 | 6 | 17.65 |
| 8. மாத்தறை | 36 | 1 | 2.78 | 7 | 19.44 | 14 | 38.89 | 11 | 30.56 | 33 | 91.67 | 3 | 8.33 |
| 9. அம்பாந்தோட்டை | 13 | 0 | 0.00 | 2 | 15.38 | 6 | 46.15 | 4 | 30.77 | 12 | 92.31 | 1 | 7.69 |
| 10. யாழ்ப்பாணம் | 1505 | 98 | 6.51 | 250 | 16.61 | 468 | 31.10 | 449 | 29.83 | 1265 | 84.05 | 240 | 15.95 |
| 11. கிளிநொச்சி | 299 | 19 | 6.35 | 51 | 17.06 | 104 | 34.78 | 78 | 26.09 | 252 | 84.28 | 47 | 15.72 |
| 12. மன்னார் | 319 | 17 | 5.33 | 39 | 12.23 | 113 | 35.42 | 91 | 28.53 | 260 | 81.50 | 59 | 18.50 |
| 13. வவுனியா | 448 | 22 | 4.91 | 44 | 9.82 | 134 | 29.91 | 159 | 35.49 | 359 | 80.13 | 89 | 19.87 |
| 14. முல்லைத்தீவ[ | 290 | 12 | 4.14 | 31 | 10.69 | 112 | 38.62 | 94 | 32.41 | 249 | 85.86 | 41 | 14.14 |
| 15. மட்டக்களப்பு | 1138 | 56 | 4.92 | 153 | 13.44 | 375 | 32.95 | 363 | 31.90 | 947 | 83.22 | 191 | 16.78 |
| 16. அம்பாறை | 693 | 46 | 6.64 | 103 | 14.86 | 239 | 34.49 | 217 | 31.31 | 605 | 87.30 | 88 | 12.70 |
| 17. திருகோணமலை | 508 | 26 | 5.12 | 84 | 16.54 | 165 | 32.48 | 163 | 32.09 | 438 | 86.22 | 70 | 13.78 |
| 18. குருநாகல் | 179 | 11 | 6.15 | 42 | 23.46 | 65 | 36.31 | 52 | 29.05 | 170 | 94.97 | 9 | 5.03 |
| 19. புத்தளம் | 225 | 12 | 5.33 | 40 | 17.78 | 90 | 40.00 | 63 | 28.00 | 205 | 91.11 | 20 | 8.89 |
| 20. அனுராதபுரம் | 114 | 1 | 0.88 | 19 | 16.67 | 51 | 44.74 | 35 | 30.70 | 106 | 92.98 | 8 | 7.02 |
| 21. பொலன்னறுவை | 46 | 2 | 4.35 | 11 | 23.91 | 11 | 23.91 | 15 | 32.61 | 39 | 84.78 | 7 | 15.22 |
| 22. பதுளை | 412 | 24 | 5.83 | 79 | 19.17 | 171 | 41.50 | 109 | 26.46 | 383 | 92.96 | 29 | 7.04 |
| 23. மொனராகலை | 50 | 3 | 6.00 | 8 | 16.00 | 14 | 28.00 | 22 | 44.00 | 47 | 94.00 | 3 | 6.00 |
| 24. இரத்தினபுரி | 151 | 6 | 3.97 | 14 | 9.27 | 63 | 41.72 | 60 | 39.74 | 143 | 94.70 | 8 | 5.30 |
| 25. கேகாலை | 193 | 12 | 6.22 | 24 | 12.44 | 75 | 38.86 | 61 | 31.61 | 172 | 89.12 | 21 | 10.88 |
| **மொத்தம்** | **8852** | **503** | **5.68** | **1336** | **15.09** | **3027** | **34.20** | **2803** | **31.67** | **7669** | **86.64** | **1183** | **13.36** |

**அட்டவணை 3**

1.2.4 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 1 | 0.01 | 14861 | 100.00 |
| 81 - 90 | 73 | 0.49 | 14860 | 99.99 |
| 71 - 80 | 776 | 5.22 | 14787 | 99.50 |
| 61 - 70 | 2223 | 14.96 | 14011 | 94.28 |
| 51 - 60 | 3480 | 23.42 | 11788 | 79.32 |
| 41 - 50 | 3451 | 23.22 | 8308 | 55.90 |
| 31 - 40 | 2642 | 17.78 | 4857 | 32.68 |
| 21 - 30 | 1539 | 10.36 | 2215 | 14.90 |
| 11 - 20 | 537 | 3.61 | 676 | 4.55 |
| 01 - 10 | 135 | 0.91 | 139 | 0.94 |
| 00 - 00 | 4 | 0.03 | 4 | 0.03 |

**அட்டவணை 4**

**மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.**

**உதாரணம் :** (31 - 40 இற்கு இடைப்பட்ட வகுப்பாயிடையைக் கருதுவோம்.)
இப்பாடத்தில் 31 - 40 வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் 2642 பேர் உள்ளனர். இது 17.78% ஆகும். 40 புள்ளிகளுக்குக் குறைவாக எடுத்த பரீட்சார்த்திகள் 4857 பேர்கள் உள்ளனர். இது 32.68% ஆகும்.

OK

### 1.3 பாடஅடைவு பற்றிய பகுப்பாய்வு

#### 1.3.1 வினாப்பத்திரம் I இல் வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள விதம்.




**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ்வரைபுக்கமைய தகவல்களைப் பெறுவதற்கான உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம் - விடையளித்தலுக்காக வினாக்களைத் தேர்ந்தெடுக்கும் போதும் 1 ஆம் 2 ஆம் வினாக்களை 99% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளார்கள். (இவ்விரு வினாவும் கட்டாயவினாவாகும்.) 6 ஆம் வினாவினை 20% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளனர்.

#### 1.3.2 வினாப்பத்திரம் I இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




**வரைபு 3** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இங்கு 1 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 24 ஆகும். இவ்வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 19-24 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் 3% ஆகவும் அதேபோன்று 24 புள்ளிகளில் 0%-25% என்ற வீச்சில் அதாவது 0 முதல் 6 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 28% ஆகவும் உள்ளனர்.

1.3.3 வினாப்பத்திரம் I - பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு



### 1.3.4 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம்




இவ்வினாப்பத்திரத்தில் பகுதி I இன் கட்டாய வினாக்களான முதல் மூன்று வினாக்களுக்கும் முறையே 99%, 98%, 98% ஆனோர் விடையளித்துள்ளனர். அத்தோடு பகுதி II இன் "அ" பிரிவு தெரிவுவினாக்களில் 4 ஆம் வினாவுக்கு 83% ஆனோரும் 5 ஆம் வினாவுக்கு 11% ஆனோரும் 6ஆம் வினாவுக்கு 3% ஆனோரும் விடையளித்துள்ளனர். அதேவேளை பகுதி II இன் "ஆ" பிரிவு தெரிவுவினாக்களில் 7ஆம் வினாவுக்கு 71% ஆனோரும் 8ஆம் வினாவுக்கு 20% ஆனோரும் விடையளித்துள்ளனர். பகுதி II இன் "அ" பிரிவில் 6 ஆம் வினாவும் "ஆ" பிரிவில் 8 ஆம் வினாவும் இலகுதன்மை குறைந்தனவாக உள்ளன.

**வரைபு 2** -(RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.5 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




இங்கு முதலாம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். இவ்வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 16-20 புள்ளியைப் பெற்றுக்கொண்டோர் 4% ஆவர். அத்தோடு 0%-25% என்ற வீச்சில் அதாவது 0-5 புள்ளிகளைப் பெற்றோர் 29% ஆவர்.

15புள்ளிகளைக் கொண்ட தெரிவு வினாவான 8ஆம் வினாவைத் தெரிவு செய்தோரில் 76%-100% என்ற வீச்சில் 2% ஆனோரும் 0%-25% என்ற வீச்சில் 74% ஆனோரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். வினாப்பத்திரம் II இன் பகுதி II இல் இலகுதன்மை மிகக் குறைந்த வினாவாக 8 ஆம் வினா காணப்படுகின்றது.

**வரைபு 2** - (RD/16/02/AL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

### 1.3.6 வினாப்பத்திரம் II பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு




வரைபு **4.1** : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

உ-ம் : பகுதி II இல் 1.19 இன் இலகுதன்மை 79% ஆகும். ஆகக் குறைந்த இலகுதன்மை 1.7, 1.12 ஆகிய வினாக்களாகும். இவற்றின் இலகுதன்மை 19% ஆகும்.

1.3.7 வினாப்பத்திரம் II பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு



## பகுதி II

## 2.0 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு

★ நேரம் 03 மணித்தியாலம்　　　மொத்தம் 100 புள்ளிகள்

★ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

பகுதி I : 2 கட்டாயவினாக்களைக் கொண்டது.

பகுதி II : 6 வினாக்களில் எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

★ எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

## 2.1.2 வினாப்பத்திரம் I - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடை அளித்தமை தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்

### பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென்வே லண்ணற் காணா வூங்கே
நின்னினும் புல்லியே மன்னே யினியே
இன்னே மாயினே மன்னே யென்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினு மீத்த னன்றென
மறுமை நோக்கின்றோ வன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே.

(அ) இச்செய்யுள் எத்துறையில் அமைந்துள்ளது என்பதை விளக்குக.

(ஆ) பாட்டுடைத் தலைவனின் கொடைச்சிறப்பு சித்திரிக்கப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(இ) அவனது வலிமை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறதென்பதை எடுத்துக்காட்டுக.

(ii) மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்
தன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்கு
அன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி னைந்துருகி நிற்பார்.

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

(ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

(இ) இச்செய்யுளிற் கையாளப்பட்டுள்ள உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குக. (24 புள்ளிகள்)

**வினா இலக்கம் 1**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

1. (i) (அ) ஆற்றுப்படை / ஆற்றுப்படுத்தல் / வழிப்படுத்தல் (04 புள்ளிகள்)

(ஆ)
- பேகனைக் காண்பதற்கு முன்னர் இருந்த வறுமை நிலையும் கண்டபின் உண்டான செல்வ நிலையும்.
- மயிலானது, உடுக்கமாட்டாது, போர்க்க மாட்டாது என அறிந்திருந்தும் அதற்குப் போர்வை வழங்கிய கொடை மடம்
- மறுமைப் பயன் கருதாது இரவலர்களின் வறுமையையே நோக்கிய கொடை

(04 புள்ளிகள்)

(இ)
- வெற்றிவேலையுடைய பேகன்
- மதம் மிக்க யானைப் படையினையும்
  செருக்கு மிக்க குதிரைப் படையினையும் உடையவன்.

(04 புள்ளிகள்)

(ii) (அ) இராமன் முடிசூடப்போவதை மக்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வேளை, முடிசூடுவதற்காக, அவனைச் சுமந்திரன் தேரில் அழைத்துச் சென்றதைக் கண்ட மக்கள் நிலை

(04 புள்ளிகள்)

(ஆ) ஒப்பற்ற தனது கன்று தனியாகத் தாவிக் குதித்து வரக்கண்ட தாய்ப்பசு அன்பு கனிந்த உள்ளத்தோடு உருகி நிற்பதுபோல, மின்னலை ஒத்த தேரின்மீது வீரனாகிய இராமன் வரும் வேளையில் எலும்புகளும் உருகி, நெஞ்சும் உருகி, உடலும் உருகி நைந்து நின்றனர்.

(04 புள்ளிகள்)

(இ)
- ஆ உருகுமா போல்
  உவமானம் - தனது கன்றை கண்டு உருகும் தாய்ப்பசு
  உவமேயம் - இராமனைக் கண்டு உருகும் மக்கள் நிலை
  பொதுத்தன்மை - உருகுதல் / இரங்குதல்

- மின்பொருவு தேர்
  உவமானம் - மின்னல்
  உவமேயம் - தேர்
  பொதுத்தன்மை - ஒளி / வேகம்

(04 புள்ளிகள்)

(12 + 12 = 24 புள்ளிகள்)

**1 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




வினாப்பத்திரம் I இன் பகுதி I கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 24 ஆகும்.
இதில் 00 - 06 ஆயிடையில் 28%
07 - 12 ஆயிடையில் 50%
13 - 18 ஆயிடையில் 19%
19 - 24 ஆயிடையில் 3%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 13 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 22% ஆனோர் ஆவர். பரீட்சார்த்திகளில் 78% ஆனவர்கள் வினாவுக்குரிய மொத்தப் புள்ளியில் அரைவாசிக்கும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர்.




இவ்வினா கட்டாய வினாவாகும். இரண்டு பகுதிகளுள் ஒவ்வொன்றும் மூன்று உபபிரிவுகளைக் கொண்டமைந்துள்ளன. முதலாவது பகுதியில் "(இ)" உபபிரிவிலும் இரண்டாவது உபபகுதியில் "(அ), (ஆ), (இ)" உபபிரிவுகளிலும் இலகுதன்மை குறைவாக காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

(i)
- திணை, துறை என்பன சரியாக இனங்காணப்படாமை.
- பாட்டுடைத் தலைவனின் கொடைச்சிறப்பினைச் சித்திரிக்கின்ற பாடலடிகளை முழுமையாக இனங்காணத் தவறியமை.
- பாடலை முழுமையாகக் கிரகித்து வினாவுக்கு ஏற்ற விடையினை இனங்கண்டு எழுதத் தவறியமை.
  * எடுத்துக்காட்டு : வெற்றிவேலையுடைய பேகன்
- செய்யுளில் வெளிப்படுத்தப்படும் விடயங்களை இனங்காணும் திறனைப் பெற்றுக்கொள்ளாமை.

(ii)
- செய்யுள் எப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டது என்பதை அறியாதிருத்தல்.
- செய்யுளைப் பதம்பிரித்துப் பொருளறிய முடியாமை.
- அணிகளை இனங்காணத் தவறியமை.
- செய்யுள் சித்திரிக்கும் காட்சி அல்லது விடயம் இடம்பெறும் சந்தர்ப்பத்தை இனங்காண முடியாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

(i)
- திணை, துறை, பாடியவர், பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் என்பனவற்றைத் தெளிவாக விளக்குதல்.
- செய்யுளில் கூறப்பட்டுள்ள விடயங்களைப் பகுத்து நோக்குந்திறனை (பேகனின் கொடை, வீரம்) வளர்க்க வழிப்படுத்தல்.
- செய்யுளில் வெளிப்படுத்தப்படும் விடயங்களை இனங்காணுதல் தொடர்பாகப் பயிற்சிகளை வழங்குதல்.

(ii)
- தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் மாத்திரமல்லாது பாடத்திட்ட முழுமையிலும் கவனம் செலுத்துதல்.
- செய்யுளைப் பதம்பிரித்து வாசிக்கவும் கொண்டுகூட்டவும் பொருளறியவும் பயிற்சியளித்தல்.
- அணிகளை இனங்காணவும் விளக்கமளிக்கவும் வாய்ப்பளித்தல். (உவமை, உருவகம், உயர்வுநவிற்சி, தற்குறிப்பேற்றம்....)
- கருப்பொருளை நவீன ஆற்றுகையாக நிகழ்த்தி, தெளிவுபெறச் செய்தல்.

## வினா இலக்கம் - 02

2. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக் கிடந்தா னொரு நாளில்
கூழைப் பிசைந்தான் குடிசையிலே - அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே

நிலத்தை யுழுவான் நிலத்தினிலே - தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலப்பை யிழுக்கும் மாட்டுடனே - அவன்
காலங் கழித்தான் கண் கலங்கி

உண்பது முடுப்பதும் வயல்தனிலே - அவன்
உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே
விண்தான் தனது கூரையென - ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்

உழுபவருக்கு நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக்கிடச் சட்டங்கள்
நலிவு இன்றிச் செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்

பண்ணை முறையில் பலநூறு - வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்

காட்டை வெட்டிக் களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி - ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி

அன்னை நாட்டைக் காப்பவனே - அதைப்
பசியில் நின்று மீட்பவனே
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க

(i) இக்கவிதையில் கவிஞர் ஆண்டவனாக யாரைச் சித்திரிக்கின்றார் ? ஏன் ?
(ii) விவசாயியின் உழைப்பு, அடிமைநிலை, வறுமை என்பன சித்திரிக்கப்படுமாற்றை விளக்குக.
(iii) விவசாயியின் முன்னேற்றத்துக்குக் கவிஞர் கூறும் வழிவகைகள் யாவை ?
(iv) கவிஞர், விளைநிலத்தைக் கோயிலாகச் சித்திரிப்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக.

**அல்லது**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2. (அ) (i)
- இப்பாடலில் கவிஞர் விவசாயியினையே ஆண்டவனாகச் சித்திரிக்கின்றார்.
- பயிர்செய்து, நாட்டைக்காத்து பசிதீர்க்கும் உணவாகிய அமுதத்தைஅளித்து உயிர் காப்பதனால்

அல்லது

ஆண்டவன் உயிர்களைக் காப்பதுபோல் உலகமக்களுக்கு அமுதாகிய உணவு தந்து காப்பதனால் (பசியில் இருந்து பாதுகாத்தல்) விவசாயியை ஆண்டவன் என்கிறார்.

(04 புள்ளிகள்)

(ii) **உழைப்பு :**
- நிலத்தை உழுவது, கலப்பையுடனும் மாட்டுடனும் காலங்கழிப்பது, உண்பது, உடுப்பது, உறங்குவது எனச் சகலதும் வயலினிலே.
- காட்டை வெட்டிக் களமாக்குதல்.
- வியர்வை சிந்தி உழைத்தல்

**அடிமைநிலை :**

அடங்கிக் கிடத்தல், முதலாளியை எதிர்க்காமை

**வறுமைநிலை :**

கூழ் குடித்தல், குடிசை வாழ்வு, கலக்கத்துடன் காலங்கழித்தல்.

(04 புள்ளிகள்)

(iii)
- உழைப்பவருக்கே நிலம் சொந்தம் என்ற சட்டம் இயற்றப்படல், பண்ணை முறையில் பலநூறு வயற்பரப்பில் விவசாயம் செய்து உழைக்க வழி செய்தல்.

(04 புள்ளிகள்)

(iv) கோயில் இறைவன் உறையும் இடம்; நாட்டின் இறைவனான விவசாயி வாழும் இடம் வயல். கோயில் அடியவர்களுக்கு அருள் வழங்கி இரட்சிக்கும் இடம்; விவசாய நிலம் உணவளித்து காக்கும் இடம். (04 புள்ளிகள்)

($4 \times 4 = 16$ புள்ளிகள்)

2. (ஆ) வண்ணமலர்ச் செடிகள் மிகுதியாக வளர்ந்து நிற்கும் அந்த வீட்டுக்குள் நுழைந்த வள்ளியின் தந்தை கந்தனுக்கு அப்படிப்பட்ட ஒரு வீட்டை ஏழு தலைமுறை சென்றாலும் தனது சந்ததியால் கட்டிமுடிக்க இயலாதென்ற திடமான நம்பிக்கை அதைப் பார்த்ததும் ஏற்பட்டது. அங்குள்ள சுவர்கள் - அங்குள்ள விறாந்தைத் தரைகள் - அங்குள்ள மின்விளக்கு அலங்காரங்கள் - அங்குள்ள மீன் தொட்டிகள் யாவுமே அவனைப் பிரமிப்பிலாழ்த்தின. உண்மையிலேயே வள்ளி அதிர்ஷ்டக்காரிதான்! அவள் பிறந்த நட்சத்திரத்தை அவன் நினைத்துப் பார்த்தான். திருவோணம். ராணியாட்டம் வாழுவாள் என்று சோதிடர் சொல்லி இருக்கிறார்.

ஒரு பக்கத்தில் ஒதுங்கி, கைகட்டி எஜமானனுக்கும் அவரது மனைவிக்கும் பதில் சொல்லிக்கொண்டிருந்த அவனுக்கு வள்ளிக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த கிளாசில் தேநீர் வந்தது. புனிதமான கோயிலொன்றுக்குள் பிரவேசித்து, தேவி சமேதரராய் எழுந்தருளியிருக்கிற ஆண்டவன் முன்னால் பக்திப் பரவசமாக நிற்கும் ஒரு பக்தனைப் போல அவன் குரல் தளதளத்தது.

"எனது தெய்வங்களே! இதெல்லாம் என்னத்துக்கு, மூன்று நேரம் சாப்பாடு குறையாமல், வள்ளியை உங்களது சொந்தப் பிள்ளை போலப் பாக்கிறியள். அதுக்கே நாங்கள் சாகுமட்டும் ஊழியம் செய்யவேணும்... அவள் அதிர்ஷ்டம் செய்துதான் இங்கை வந்தவள். அவளை ஒருக்கா அவள் தாய் பார்க்கவேணும். கூட்டிக் கொண்டு வா எண்டு சொல்லி ஆசைப்பட்டவள்தான். ஆனா தாய்க்குத் தாயாய் என்ரை அம்மா கவனிக்கையிக்கை, அவளை என்னத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டவேணும்...? அவளின்ரை சம்பளத்தைத் தந்தால் போதும்... பிறகு - ஆறுதலாக - தாய் பார்க்கட்டும்."

சுவரின் ஒரு மூலையில் சாய்ந்து நின்ற வள்ளியின் குரல் திடிரெனத் தந்தையை நோக்கி எழுந்தது.

"ஏலாது! நான் வரப்போறன். இங்கே நிக்க மாட்டேன்."

"ஏண்டி... அங்கை வந்து வயறு காய்ஞ்சு சாகப் போறியோ ? தெய்வம் மாதிரி இந்த அம்மாவையும் ஐயாவையும் விட்டுவிட்டு வாறனெண்டு சொல்ல உனக்கு என்ன பைத்தியமே ?

"முடியாது, நான் வரப்போறன்... காய்ஞ்சு செத்தாலும் சரி, வருவேன்."

"நில்லடி... என்ரை குணம் தெரியுமே ?"

"நான் மாட்டன்! வரத்தான் போறன்"

மகளை விலக்கி வெளியே செல்ல முற்பட்ட, அவனை அவள் பின் தொடர்ந்தாள். அய்யாவும் அம்மாவும் செயலற்று நின்றனர். அவள் குரல் சீற்றமாக ஓங்கி ஒலித்தது.

"நான் மாட்டன்! வரத்தான் போறன்!"

(i) வள்ளியினது தந்தையின் அப்பாவித்தனம் வெளிப்படுமாற்றை விளக்குக.

(ii) வேலைக்காரர்களும் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்படுவது எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது ?

(iii) வள்ளியை வேலைக்கமர்த்திய வீட்டாரின் செல்வச்செழிப்பும் ஆடம்பரமும் எடுத்துக்காட்டப்படுமாற்றைத் துலக்குக.

(iv) தந்தையின் பணிவும் மகளின் துணிவும் அவர்களுடைய பேச்சுகள் மூலம் புலப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக. (16 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2. (ஆ) (i)
- எஜமானின் வீட்டைப்பார்த்து பிரமித்தல்.
- மகள் ராணியாட்டம் வாழுவாள் என்று சோதிடர் சொன்னதை நினைத்தல்
- எஜமானர்களுக்கு முன்னால் பக்திப்பரவசமாக நிற்றல்
- "எனது தெய்வங்களே" என அவர்களை விளித்தல்
- எஜமானர்களின் போலிநடவடிக்கைகளை உண்மையென எண்ணி மயங்குதல்.

(04 புள்ளிகள்)

(ii)
- "வள்ளிக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த கிளாசில் தேநீர் வந்தது" என்பதன் ஊடாக

(04 புள்ளிகள்)

(iii)
- நேரடியான விபரிப்பு :
  - வண்ணமலர்ச்செடிகள் மிகுதியாக வளர்ந்து நிற்கும் வீடு
  - சுவர்கள், விறாந்தைத் தரைகளின் அழகு
  - அலங்கார மின்விளக்குகள், அங்குள்ள மீன்தொட்டிகள்

(04 புள்ளிகள்)

(iv) **தந்தையின் பணிவு :**
- "எனது தெய்வங்களே இதெல்லாம் என்னத்துக்கு, மூன்றுநேரம் சாப்பாடு குறையாமல், வள்ளியை உங்களது சொந்தப் பிள்ளைபோலப் பாக்கிறியள். அதுக்கே நாங்கள் சாகுமட்டும் ஊழியம் செய்யவேணும்.
- வள்ளியின் தந்தை ஒரு பக்கத்தில் கைகட்டி எஜமானுக்கு அவரது மனைவிக்கும் பதில் சொல்லுதல்

**மகளின் துணிவு :**
- "ஏலாது நான் வரப்போகிறேன். இங்கை நிக்கமாட்டன்"
- "முடியாது நான் வரப்போறேன் காஞ்சு செத்தாலும்சரி வருவேன்."
- "நான் மாட்டன் வரத்தான் போறன்."

(04 புள்ளிகள்)
(4 × 4 = 16 புள்ளிகள்)

**2 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இரண்டாம் வினா தெரிவுவினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 16 ஆகும்.
இதில் 00 - 04 ஆயிடையில் 04%
05 - 08 ஆயிடையில் 18%
09 - 12 ஆயிடையில் 47%
13 - 16 ஆயிடையில் 31%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்கு 78% ஆனோர் அரைவாசிப் புள்ளியிலும் அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 22% ஆனோர் அரைவாசிப்புள்ளியிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா தெரிவு வினாவாகும். கவிதைப் பகுதி அல்லது உரைநடைப் பகுதியில் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும். ஒப்பீட்டு ரீதியில் கவிதைப் பகுதியை விட (அ) உரைநடைப் பகுதி (ஆ) இலகுதன்மை குறைந்ததாகவே காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

**கவிதைப்பகுதி :**

- கவிதைப் பகுதியில் நேரடிவினாக்களுக்கு விடையளித்த பரீட்சார்த்திகள் ஊகித்து அறியும் வினாவிற்கு விடையளிக்கத் தவறியுள்ளனர்.

**உரைநடைப்பகுதி :**

- பரீட்சார்த்திகள் பந்தியைக் கருத்தூன்றி வாசித்துக்கிரகித்து விடையெழுதத் தவறிவிட்டமை.
- வினாக்களுக்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விடையளிக்காமை.
- கேட்கப்பட்ட வினாக்களைக் கிரகித்து அதற்குரிய விடை எழுதாமை.
- வினாவில் அழுத்தம் கொடுக்கப்பட்ட சொற்களை விளங்கி விடையளிக்கத் தவறியமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

**கவிதைப்பகுதி :**

- கவிதைப் பகுதியில் நேரடியாக விடையளிக்கும் திறனைப் பெறுவதற்குப் பயிற்சியளித்தல்.
- மையக்கருத்தை விளக்குவதற்கு கவிஞரால் முன்வைக்கப்படும் குறியீட்டு உத்திகளை விளங்கி விடையளிக்கும் திறனை விருத்திசெய்தல்.
- கவிஞர் கவிதையில் கூறவந்த மையக்கருத்தையும் அதனை எடுத்துக்கூறுவதற்கு கையாண்டுள்ள உத்திகளையும் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்வதற்கு நெறிப்படுத்தல்.
- காட்சியும் கானமும் வடிவத்தில் கவிதையை முன்வைத்தல்.

**உரைநடைப்பகுதி :**

- உரைநடைப்பகுதியைக் கருத்தூன்றி வாசித்து விளங்குவதற்குரிய உத்திகளைக் கையாளுதல்
  - இரசனையுடன் வாசித்தல்
- வினாவில் எதிர்பார்க்கப்பட்ட விடையைக் கருத்திற்கொண்டு உரைப்பகுதியை வாசித்தல்.
- பாத்திரமாகப் பாவனை செய்து வாசித்தல்.
  - வெவ்வேறு நுட்பங்களினூடாகக் கிரகிப்புத்திறனை மேம்படுத்தல்.
  - எழுமாறாக வினாக்களைத் தொடுத்தல்
  - வினாவிலுள்ள முதன்மைப்பதங்களை இனங்காணச் செய்தல்.

## பகுதி II

**3. வினைத்தூய்மை** என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு,

(அ) வினைத்தூய்மையினது சிறப்பும்

(ஆ) பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யக்கூடாது என்பதும்

(இ) அதற்கான காரணமும்

வலியுறுத்தப்பட்டிருக்குமாற்றினையும்

(ஈ) அவ்வதிகாரத்தில் இடம்பெறும் உவமை எதனை உணர்த்தக் கையாளப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்துக. **(20 புள்ளிகள்)**

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

3. (அ) துணையினது நன்மை செல்வத்தை மாத்திரம் கொடுக்கும்; வினையினது நன்மை வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கும்.

(03 புள்ளிகள்)

(ஆ)
- புகழையும் நன்மையையும் தராத செயல்களை என்றும் தவிர்த்தல் வேண்டும்.
- மேன்மையை விரும்புபவர்கள் தம்மதிப்புக்கு இழுக்கான செயல்களைச் செய்தலாகாது.
- தெளிந்த அறிவினையுடையவர்கள், எவ்வளவுதான் துன்பம் நேர்ந்தாலும் இழிவுதரக்கூடிய செயல்களைச் செய்யமாட்டார்கள்.
- செய்தபின் வருந்தத்தக்க செயல்களைச் செய்தலாகாது. தவறிச் செய்யநேரிடினும் மீண்டும் அவற்றைச் செய்தலாகாது.
- பெற்றதாய் பசித்திருப்பதைக் காணநேரிடினும் அறிவுடையோர் பழியெனக் கருதும் செயல்களைச் செய்தலாகாது.

(07 புள்ளிகள்)

(இ)
- பழிதரும் இழிதொழில் செய்து பெறும்செல்வத்தைவிட தூய்மையோடிருந்து அனுபவிக்கும் வறுமை சான்றோர்க்கு உகந்தது.
- பெரியோர் விலக்கிய தொழில்களைச் செய்துமுடித்தாலும் அவை பின்னர் துன்பத்தையே கொடுக்கும்.
- பிறரை வருத்திப் பெற்ற செல்வமெல்லாம் தான்வருந்த அழியும்; நன்முறையில் பெற்றவை இழக்கநேரினும் நற்பயன் விளைக்கும்.
- பிறரை வஞ்சித்துச் சேர்த்தசெல்வம் பச்சை மண்ணாலான பாத்திரத்தில் நீரைச்சேகரித்தது போலாகும்.

(07 புள்ளிகள்)

(ஈ) தேடியபொருள் கெடுவதன்றி அது யாரிடம் சேர்க்கப்படுமோ அவருக்கும் அழிவைக் கொண்டுவரும் என்பதை உணர்த்தக் கையாளப்பட்டுள்ளது.
(நீர் விரயமாவது மட்டுமன்றி அதனைக் கொண்ட பாத்திரமும் இற்றுப்போம்)

(03 புள்ளிகள்)
(03 + 07 + 07+03= 20 புள்ளிகள்)

**3 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**

**வினாவிற்குப் புள்ளிகள் பெற்ற விதம்**




இவ்வினா தெரிவுவினாவாக அமைந்துள்ளது. வினாவிற்கான மொத்தப்புள்ளிகள் 20 ஆகும். இதில் 00 - 05 ஆயிடையில் 12%
06 - 10 ஆயிடையில் 13%
11 - 15 ஆயிடையில் 37%
16 - 20 ஆயிடையில் 38%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 75% ஆனோர் அரைவாசிப் புள்ளிகளிலும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 25% ஆனோர் அரைவாசிப் புள்ளிகளிலும் குறைவாகவே பெற்றுள்ளனர்.

**வினாவின் பிரிவுகளும் உபபிரிவுகளுக்கான இலகுதன்மையும்**




இவ்வினா 4 உபபிரிவுளைக் கொண்டது. 4 உபபிரிவுகளுக்கும் 59% இற்கும் அதிகமானோர் விடையளித்துள்ளனர். உபபிரிவு (அ) இலகுதன்மை கூடியதாகவும் (83%), உபபிரிவு (ஈ) இலகுதன்மை குறைவாகவும் (59%) காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- உவமையணியினால் விளக்கப்பட்ட பொருளை விளங்கிக் கொள்ளாமை.
- வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைச் சுட்டிப்பாக இனங்காணாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- உவமையணிகளின் பொருத்தப்பாட்டை இனங்காணச் செய்தல்.
- உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை இனங்காண வைத்தல்.
- ஆசிரியர் அணியைக் கையாண்ட நோக்கத்தைத் தெளியவைத்தல்
    - உவமேயம் ஒன்றினைக் கொடுத்து அதற்குப் பொருத்தமான உவமானங்களை முன்வைக்கத் தூண்டலும் அதன் பொருத்தப்பாட்டை விளங்க வைத்தலும்.
      உ - ம் : உவமேயம் - பல் (முத்துப் போன்ற பல்)

குறிப்பு : இவ்வினாவின் (ஈ) பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு திருப்திகரமாக விடையளித்துள்ளனர். எனினும் திருக்குறளைக் கற்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களுக்கு அழுத்தங் கொடுத்தல் வேண்டும்.
- குறளை மனனஞ் செய்வதற்குப் பயிற்சியளித்தல்.
- குறள்களின் பொருளைத் தெளிவாகக் கூறுவதற்கு வழிப்படுத்தல்.
- குறள்வைப்பு முறைக்கேற்ப குறள்களை வகுக்கவும் தொகுக்கவும் ஒழுங்குபடுத்தி எழுதவும் வழிகாட்டல்

**4. கைகேயி சூழ்வினைப் படலத்தில்** தசரதன் கைகேயிக்கு வரமளித்தது முதல் மகளிர் பள்ளி எழுந்தது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

**(அ) தசரதனின் துயரும் சினமும்**

**(ஆ) தசரதனது துயர்கண்டு இரங்காத கைகேயி மீது கவிஞர் கொண்ட வெறுப்புணர்ச்சி**

**(இ) இராமன் மீது மக்கள் கொண்ட அன்பு**

**(ஈ) தற்குறிப்பேற்ற அணிகள் எவையேனும் இரண்டின்** சிறப்பு **(20 புள்ளிகள்)**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

4. (அ) தசரதனின் துயரும் சினமும்

**துயர் :-**

- என் மகன் வனம் ஆள, அதைத் தாங்காது இறந்து விடுவேன் என அரற்றுதல்.
- கொலை வாளினால் தாக்குண்ட புண்ணில் வாள்பட்டால் ஏற்படும் வேதனை போன்ற துன்பம்
- இதுவரை உயிரொன்று போல இருந்த மனைவியால் ஏற்பட்ட துயரைத் தாங்க முடியாமை.

**சினம் :-**

- "வசைவெள்ளம் நீந்தாய் நின் மகனொடும் நெடிது" என மனைவிக்கும் மகனுக்கும் சாபம் கொடுக்கும் அளவுக்குச் சினமடைந்திருத்தல். (05 புள்ளிகள்)

(ஆ) கைகேயி மீது கவிஞர் கொண்ட வெறுப்புணர்ச்சியை பொழுது விடிகின்றபோது ஏற்படும் இயற்கை நிகழ்ச்சிகளினூடாக வெளிப்படுத்துகின்றார்.

- கைகேயியின் செயல் கண்டு கங்குலாகிய நங்கை மைந்தர்முன் நிற்கவும் நாணி ஏகுதல்.
- கோழிகள் நெஞ்சில் அடித்து அலறுதல்.
- பறவைகள் கைகேயியை ஏசுவதுபோல ஆரவாரஞ் செய்தல்.
- கைகேயி செயல்கண்டு குலமகளிர் வாய் மூடியதுபோல குமுதமலர்கள் வாடுதல்.

(05 புள்ளிகள்)

(இ) வில்லை ஏந்திய இராமனை அரசனாகத் தொழும் நாள் வந்துவிட்டது என்ற மகிழ்ச்சியில் மாதர்கள் துயில் எழுதல்.

- இராமனைச் சேர்வதுபோலக் கனவுகண்ட சில இளம்பெண்கள் கனவினுக்கு இடையீடு ஏற்பட, துயில் நீங்கியதே எனத் துன்பமடைதல்.
- ஆடவர் "இராமன் முடிசூடும் நாள் ஏழுலோகமும் எண் தவம் செய்த கண்ணும் எங்கள் மனங்களும் வாழு நாள்" என்று குதூகலங் கொள்ளல்.
- மடந்தையர், வியப்பைத் தருகின்ற ஒளி உமிழும் மேனியனான இராமனின் முடிசூட்டு நிகழ்ச்சியைக் காண, தம் பொய்யுறக்கம் துறந்து எழுதல். (05 புள்ளிகள்)

(ஈ)

- இரவு விடிதல் :
  தசரதனுடைய துயர் கண்டும் இரங்காத கைகேயியின் செயலுக்கு வெட்கி, மைந்தர் முன் நிற்க வெட்கப்பட்டு, இரவாகிய பெண் நீங்கினாள் என இரவு கழிதலுக்குக் காரணம் கற்பித்தல்.

- கோழி கூவுதல் :
  தன் கொடிய வார்த்தைகளால் தசரதன் மயங்கி விம்முவது கண்டும் இரங்காத கைகேயியின் செயல் கண்டு நெஞ்சு கலங்கி கோழிகள் தம் வயிற்றில் அடித்து அழுதன என, கோழிகள் கூவுதலுக்குக் காரணம் கற்பித்தல்.

- பறவைகளின் ஒலிகள் :
  பறவைகள் ஒலி எழுப்புவதை கேகய மன்னன் பெற்ற விடத்தை ஒத்த கைகேயியை மனங்கொதித்து வைதன எனக் குறிப்பிடுதல்.

- யானைகள் துயில் எழல் :
  இராமன் சீதையுடன் காட்டுக்குப் போனால் நாமும் காட்டுக்குப் போவோம் என்று யானைகள் துயில் நீங்கி எழுந்தன எனல்.

- விண்மீன்கள் மறைதல் :
  இராமன் மங்கல நாண் பூணுவதற்காக வானத்திலே குளிர்மையான முத்துக்களைப் பரப்பி வேயப்பட்ட பந்தலைப் பிரித்து விட்டது போன்று விண்மீன்கள் மறைந்தன எனக் காரணம் கற்பித்தல்.

- குமுத மலர்கள் குவிதல் :
  கைகேயியின் தகாத செயலைப் பார்த்து குலப் பெண்கள் வாய் மூடியது போல குமுத மலர்கள் குவிந்தன என்று குறிப்பிடுதல்.
  (எவையேனும் இரண்டு)

(05 புள்ளிகள்)

(05 × 04= 20 புள்ளிகள்)

**4 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாக அமைந்துள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 78%
06 - 10 ஆயிடையில் 15%
11 - 15 ஆயிடையில் 5%
16 - 20 ஆயிடையில் 2%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 93% ஆனோர் அரைவாசிப் புள்ளியிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 7% ஆனோர் மாத்திரம் அரைவாசிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 4 உபபிரிவுளைக் கொண்டது. 4 உபபிரிவுகளுக்கும் 30% இற்கும் அதிகமானோர் விடையளித்துள்ளனர். ஆயினும் 4 உபபிரிவுகளும் இலகுதன்மை குறைவானவையாகவே காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கொடுக்கப்பட்ட பாடல் பரப்புக்குள் நின்று விடையளிக்கத் தவறியமை. (49 - 60 வரையான பாடல்கள்)
- செய்யுள்களுக்கான பொருளைத் தெளிவாக விளங்கிக்கொள்ளாமை.
- பாத்திரங்களின் குணவியல்புகளை விளங்கிக்கொள்ளாமை.
- பாடலடிகளை மேற்கோள்காட்டி விளக்கி எழுதாமை.
- பாடல்களில் இடம்பெற்ற அணிகளையும் அவற்றின் பொருத்தப்பாடுகளையும் விளங்கி எழுதுவதற்குச் சிரமப்பட்டமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- கதையோட்டத்துடன் தொடர்புபடுத்திச் செய்யுள்களைப் பகுத்தும் தொகுத்தும் நோக்குந்திறனை வளர்த்தல்.
- பாடல் பரப்புக்குள் இருக்கும் சிறப்புக்களைத் தெளியவைத்தல்.
    - பாத்திரப் பண்பு
    - காட்சியமைப்பு
    - உணர்வு நிலைகள்
    - அணிப்பயன்பாடுகள்
    - சொல்லாட்சி
    - கற்பனைத் திறன்
- பாடலைப் பதம் பிரித்து, கொண்டுகூட்டி பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள நெறிப்படுத்துதல்.
- மாணவர்கள் பாத்திரமேற்று பாவனைசெய்து நடிப்பதன் மூலம் பாத்திரங்களின் பண்புகளை அறிந்துகொள்ளல்.
- விவாதம், சொற்பொழிவுகள் மூலம் பாத்திரங்கள் பற்றிய முழுமையான அறிவினைப் பெறுவதற்கு வழிப்படுத்துதல்.
- சந்தரப்பங்களுக்குப் பொருத்தமான பாடலடிகளை மேற்கோள்காட்டி எழுதுவதற்கு ஆற்றுப்படுத்தல்.
- அணிகளின் வகைப்பாடுகளை இனங்காண வைத்தலும் எடுத்து விளக்கச் செய்தலும்.

**5.** தேம்பாவணி **பைதிரம் நீங்கு படலத்தில்** மரியாள், திருமகனை எருசலேம் கோயிலில் ஒப்புக்கொடுத்தது முதல் நகரை விட்டு நீங்குவது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) எருசலேம் கோயிலின் எழில்

(ஆ) வானவன் கொண்டுவந்த சேதி கேட்டு சூசையடைந்த துயரமும் மனக் குழப்பமும்

(இ) மரியாளின் மெல்லியல்பும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவள் கொண்ட திடசங்கற்பமும்

(ஈ) இயேசுபாலனின் மகிமைகள்

(உ) உவமையணியைக் கையாள்வதில் வீரமாமுனிவரின் ஆற்றல் **(20 புள்ளிகள்)**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

5. (அ)
- மேகங்கள் குடிகொண்ட மலைபோன்று நறுமணப்புகை சூழ்ந்தது.
- வானவர்கள் தங்கிவாழும் பதி
- பொன்னொளி பொங்கும் கோயில் (பொற்காந்தாம் அக் கோயில்)

(04 புள்ளிகள்)

(ஆ)
- துயரம்
  - நெருப்பில் விழுந்த பசுமையான பூங்கொத்துப் போலவும்
  - கண்களில் வேல் குத்தப்பட்டது போலவும்.
  - புண்ணின் துளையுள் செந்தீ நுழைந்தது போலவும்
  - கடலின் நீர்ச்சுழியுள் சிக்கியது போலவும்
  - புலியின் நிழல் கண்டேங்கிய மான் போலவும் துயருறுதல்.
- மனக்குழப்பம்
  - சென்றடைய வேண்டிய எகிப்து தொலை தூரத்தில் உள்ளமை.
  - வழி தெரியாமை.
  - வழிநடத்துவதற்குத் துணையின்மை.
  - வழிச்செலவிற்குப் பணமின்மை.
  - எகிப்தில் உறவினர், நண்பர் இல்லாமை.
  - மெல்லியல்புடைய மரியாளும் குழந்தை நாதனும் அப்பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை.
  - எகிப்தில் தருமகுணமுடையோர் இல்லாமை என்பவை பற்றிய மனக்குழப்பம்.

(04 புள்ளிகள்)

(இ)
- மரியாளின் மெல்லியல்பு
  - பொலிந்த நிழலிடையே வளர்ந்து மலர்ந்த பூங்கொம்பு போன்று மென்மையானவள்
  - தாமரையைப் பழித்த சீறடியுடையாள்
- இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவள் கொண்ட திடசங்கற்பம்
  - துயரமிருப்பினும் மீறக்கூடாத கட்டளையென அதனையேற்றுச் செயற்படுத்தத் துணிந்தமை.
  - மனத்தெளிவு பெற்றமை.
  - தான் மரணத்தைத் தழுவவேண்டிய கொடிய துயருற்றாலும் இறைவனின் கட்டளையை நிறைவேற்றுவதாக உறுதிகூறுதல்.

(04 புள்ளிகள்)

(ஈ) இயேசுபாலனின் மகிமைகள்

- முக்காலமும் உணர்ந்தவன்
- மெய்ப்பொருளைத் தெளிவிப்பவன்
- முற்றறிவினால் மேம்பட்டவன்
- பாவவினையை நீக்க வந்தவன்
- அறக் கடலோன்
- ஞான நெடுஞ்சுடரனையான்
- மேகத்தை வாகனமாகவும், விண்மீனைக் கொடியாகவும், மதியைக் குடையாகவும் கொண்ட அரசன்
- மரியாளும் சூசையும் கடவுளெனப் போற்றும் தகைமையுடையவன்
- வானவர்களால் புகழ்ந்து பாடப்பட்டவன் (04 புள்ளிகள்)

(உ) உவமை அணிகள்

- மரியாள் பொலிந்த நிழலிடையே வளர்ந்த பூங்கொம்பு போன்றவள்
- புலி நிழற்பட்டேங்கிய மானின் நிலையில் சூசை
- மஞ்சு பதி கொண்ட மலைபோன்ற, அமரர் வைகும் கோயில்
- அன்னப்பார்ப்பு அனைய திருமகன்
- நீரால் நிறைந்த மேகம்போன்ற போர்வை
- ஆதவன் போன்ற திருமகன்
- தாமரைமலர் போன்ற பாதங்களை உடைய திருமகன்

(உவமைகளை விளக்குதல் வேண்டும்.)

(04 புள்ளிகள்)

(04 × 05= 20 புள்ளிகள்)

**5 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா ஐந்து உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.
இதில் 00 - 05 ஆயிடையில் 28%
06 - 10 ஆயிடையில் 33%
11 - 15 ஆயிடையில் 29%
16 - 20 ஆயிடையில் 10%
எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் 5 உபபிரிவுகளுக்கும் 63% ஆனோர் விடையளித்துள்ளனர். உபபிரிவு (ஆ) இலகுதன்மை கூடியதாகவும் உபபிரிவு (அ) இலகுதன்மை குறைந்ததாகவும் காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- ஓரிரு பாடல்களிலும் வினாவிற்கான விடை காணப்படலாம் என்பதில் கவனம் செலுத்தாமை.
- வினாக்களை விளங்கிக் கொள்வதில் இடர்பட்டமை.
    - வானவன் கொண்டுவந்த **சேதிகேட்டுச்** சூசை அடைந்ததுயரமும் மனக்குழப்பமும்
    - மரியாளின் மெல்லியல்பும் **இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில்** அவள் கொண்ட திடசங்கற்பமும்
- பாடற்கருத்துக்களைத் தெளிவாக விளங்கிக்கொள்ளாமை.
- பாடலடிகளை மேற்கோள்காட்டி எழுதுவதற்கு இடர்பட்டமை.
- கவிஞர், உவமையணிகளைக் கையாளுவதில் கொண்டுள்ள ஆற்றலை இனங்காணாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- கொடுக்கப்பட்ட பாடற்பகுதி முழுவதையும் கவனத்திற்கொண்டு கற்றலும் கற்பித்தலும்.
- வினாவில் இடம்பெறும் முதன்மைப்பதங்களை இனங்காணச்செய்து விடையெழுத வழிப்படுத்தல்.
- பாடல்களைச் சந்திபிரிக்கவும் கொண்டுகூட்டவும் பொருளெழுதவும் நெறிப்படுத்தல்.
- பொருத்தமான இடங்களில் பொருத்தமான பாடலடிகளை மேற்கோள்காட்டி எழுதுவதற்கு வழிப்படுத்தல்.
- அணிகளை இனங்காணச் செய்வதோடு, அணிகளைப் பொருத்தமான வகையில் கவிஞர் கையாளும் சிறப்புப்பற்றியும் தெளிவுறுத்தல்.
- உரைச்சித்திரம் உள்ளிட்ட பொருத்தமான வடிவங்களை முன்வைக்க வழிப்படுத்தல்.

**6.** பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் **தமிழ்ச் செல்வாக்கு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

**(அ)** அரசியல்

**(ஆ)** சமயம்

**(இ)** மொழி

ஆகிய துறைகளில் பிறநாடுகள்மீது தமிழகத்தின் செல்வாக்கு பரவியவாற்றை விளக்குக. **(20 புள்ளிகள்)**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

6. (அ) அரசியல்

- ராஜேந்திரன் (கடாரம் கண்டான்), சுந்தரபாண்டியன் என்போர் கீழைக்கடலில் உள்ள தீவுகளில் கொண்டிருந்த உரிமை.
- நரசிம்மன் (மாமல்லன்) இராஜசிம்மன் ஆகிய பல்லவ மன்னர்கள் பூண்டிருந்த உரிமை
- பர்மாவில் மூன்றாம் நந்திவர்மனின் பெயர் குறித்த வணிகம் தொடர்பான கல்வெட்டில் காணப்படும் “அவனி நாராயணன் ” எனும் பெயர்த்தொடர்பு
- தமிழ்நாட்டிலிருந்து இலங்கை, சம்பா முதலிய இடங்களுக்கு ஆட்சியை நிலைநிறுத்த மக்கள் சென்றமை.

(04 புள்ளிகள்)

(ஆ) சமயம்

- தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் பௌத்தப்பண்பாடு பரவியமை
- கிழக்குக் கடற்கரைப்பகுதியில் மணிமேகலைத் தெய்வத்தின் பரம்பல்
- நாகர்கள் பௌத்தர்களாக மாறுதல் (மணிமேகலை)
- கீழைக்கடற்கரை நாடுகளில் இந்துமதத்தின் செல்வாக்கு
- தத்துவச்செல்வாக்கு (கல்வெட்டுச்சான்று காஞ்சி சங்கராச்சாரியார்)
- தொலைகிழக்கு நாடுகளில் “பாண்டுரங்கன்” என்ற பெயர் பரவிக் காணப்படல்.
- தாய்லாந்தில் ஊசல்விழா
- திருவெம்பாவை, திருப்பாவைச் செல்வாக்கு
- சிவன், விஷ்ணு, கணேசன் கோயில்கள்
- திருமுறைகள் மந்திரங்களாக உச்சரிக்கப்படல்
- தமிழின் “திருக்கடைத்திறப்பு” என்ற வழக்கு “கைலாயக்கதவுகளின் திறப்பு” என வழங்கிவருதல்.
- மூவர் தேவாரத்தின் செல்வாக்கு (பிராமணர் ஓதுகின்ற பாடல்கள்)
- விஷ்ணுவை ‘சுகோதயபெருமாள்’ என அழைத்தல்.
- பிராமணர்கள், மலேயமக்களுடன் கலப்புமணம் செய்தபோது இராஜகுருக்கள் என்று அழைக்கப்படல்.
- ஆட்பெயர்களில் சைவாகமங்களின் செல்வாக்கு

(08 புள்ளிகள்)

(இ) மொழி

- ஈழத்துப் பூதந்தேவனார் மதுரைத் தமிழ்ச்சங்கத்துடன் கொண்ட தொடர்பு
- இடைக்காலத்தில் இலங்கைத்தமிழர்கள் இரகுவம்சம், தட்சணகைலாயபுராணம் முதலியவற்றினைப் படைத்தமை.
- தமிழுரைநடை, தமிழ்க்கல்வி இரண்டிலும் ஆறுமுகநாவலர், விபுலானந்தர் முதலானோர் ஆற்றிய தொண்டுகள் (தமிழகத்திலும் ஈழத்திலும்)
- பல தமிழ்ச்சொற்கள் சிங்களமொழியில் புகுந்து அதன் ஒரு பகுதியாகவே மாறியமை.
- கண்ணகியின் கதை சிங்களத்தில் "பத்தினிதெய்யோ" வின் கதையாக மாறியமையும் அது தொடர்பான கதைமரபுகள் நிலவுகின்றமையும்.
- சிங்களமொழியில் உள்ள செய்யுள் அடிமுறைகள் தமிழ்ச்செய்யுளிலுள்ள அளவைகளை நினைவூட்டுதல்.

(08 புள்ளிகள்)

(04 + 08 + 08= 20 புள்ளிகள்)

**6 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாகும். மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 29%
06 - 10 ஆயிடையில் 27%
11 - 15 ஆயிடையில் 35%
16 - 20 ஆயிடையில் 9%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 3 உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. உபபிரிவு (இ) இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கட்டுரை முழுவதையும் நினைவுக்கு உட்படுத்தி விடையெழுதத் தவறியமை.
- மொழி, அரசியல், சமயம் போன்ற விடயங்கள் கட்டுரையில் பின்னிப்பிணைந்து காணப்பட்டமையினால் அதனைப் பிரித்துநோக்கும் திறனைப் பெற்றுக்கொள்ளாமை.
- கேட்கப்பட்ட வினாவிற்கு அமைவாகப் பொருத்தமான மேற்கோள்காட்டி விடையெழுதத் தவறியமை.
- கொடுக்கப்பட்ட உரைநடைப்பகுதியை விளங்கிக் கொள்ளாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- கட்டுரை முழுமையையும் உள்வாங்குவதற்கான உத்திகளை இனங்காண்பதற்கு வழிப்படுத்தல்
    - கருத்தூன்றி வாசித்தல்.
    - சுருக்கக்குறிப்பு எடுத்தல்.
    - சிறியசிறிய வினாக்களினூடாக விடைகளைத் தேடவைத்தல்.
    - வாய்மொழி மூலமான வினாக்களைத் தொடுத்து விடைகளை முன்வைக்கச் செய்தல்.

- திறந்தநூல் பரீட்சையின் மூலம் நெறிப்படுத்தல்.
- குழுச்செயற்பாட்டின் மூலம் முக்கியமான பகுதிகளைப் பிரித்துநோக்கி விடைகளைக் காணவைத்தல்.
- எடுத்துக்காட்டுக்கள், மேற்கோள்கள் என்பவற்றை முன்வைத்து விடையெழுத நெறிப்படுத்தல்.
- உரைநடைப்பகுதியில் காணப்படும் ஒவ்வொரு பந்தியின் சாராம்சத்தையும் சுருக்கக்குறிப்பாக எடுப்பதற்கு நெறிப்படுத்தல்.

**7.** ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பயணத்தில், அம்மக்களிடத்தே,

(அ) ஒற்றுமை உணர்வு

(ஆ) சமூக அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்ட குணம்

(இ) சமூக, அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகள்

என்பன வேண்டுமென்பதை **நீண்ட பயணம்** நாவல் புலப்படுத்துமாற்றை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

7. (அ)
- நன்மை தீமைகளிலும் சாதாரண நேரங்களிலும் ஒருவருக்கொருவர் இணக்கமான உறவு
- தாழ்த்தப்பட்ட பள்ளர், பறையர் சமூகங்களுக்கிடையே ஒற்றுமை (உ-ம் : பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த செல்லத்துரையனும் பறையர் சமூகத்தைச் சேர்ந்த மாதவனும் இணைந்து செயற்படல்.)
- "உங்களுக்கை ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஏற்பட வேணும். அப்பதான் நிலைமையை ஓரளவு சீர்படுத்தலாம். எதிரிகளாய் இருக்கும் மட்டும் உங்களிடையே சிலரை ஆயுதமாக்கி மற்றவர் மேல் பாயவிடுவார்கள்" என்று மாதவன் பஞ்சமரிடையேயான ஒற்றுமையை வலியுறுத்தல்.
- தீர்த்தத்திருவிழாவில் பள்ளர்கள் அனைவரும் ஒன்றாகச்சென்று அமைதிகாத்தல்.
- நல்லானின் மரணச்செய்தி கேட்டதும் அனைவரும் கோயிலைவிட்டு அகன்றமை.
- பொன்னம்பலவாணர் இறந்தபோது பறையர் குடிமைமேளம் கொட்ட ஒட்டுமொத்தமாக மறுத்தல்.

(07 புள்ளிகள்)

(ஆ) போராட்ட குணம்
- செல்லத்துரையன் என்ற கதாபாத்திரத்தின்வழி இப்போராட்ட உணர்வு நாவல் முழுவதும் பரந்து காணப்படுகின்றது.
- "கோயிலில் ஒடுக்கப்பட்டவர்களுக்காகக் கட்டப்பட்ட கயிறை அறுத்து எறிவன்" என்று செல்லத்துரையன் கூறியது.
- நல்லானை உயர்சாதியினர் தாக்கியபோது அவனுக்காக குரல்கொடுத்தும் அவனது வாயிலிருந்து பலவாறான வார்த்தைப் பிரயோகங்கள் வெளிப்பட்டதும். ("பள்ளப்பிள்ளை பேசிறதா? என்ன திமிர்?" என்று உயர்சாதியினர் பேசுமளவிற்கு அவனது எதிர்ப்புக்குரல் அமைந்தது.)
- தீர்த்தத்திருவிழாவிற்குச் செல்லவேண்டாம் என்று அவனைப் பலர் (தந்தை, சரஸ்வதி) தடுத்தபோதும் "போகத்தான் போறன் செய்யிறவன் செய்துபார்க்கட்டும்" என்று வீம்புடன் பேசிவிட்டுச் செல்லுதல்.
- "மனிதன் மானம், ரோசத்தோடு சுதந்திரமாக நீண்டநாள் வாழமுடியாதா? அடிமையாக நசிந்துதான் வாழ்நாளை நீட்டிக்கொள்ளவேண்டுமா? எத்தனை பரம்பரையாக சந்ததி சந்ததியாக இப்படி வாழ்வது?" என்று குமுறுதல்.
- வேதக்காரப்பள்ளர், வேதத்தில் சேர்வதற்கு முன்பு அம்மன் ஊர்வலத்தின்போது செல்லப்பன் என்பவன் நிறைகுடத்தைத் தூக்கிச்சென்று சுவாமிமுன் வார்த்தது.
- "நாங்களென்ன பூந்தொட்டி மரங்களா? வளரவிடாது விரும்பியபோதெல்லாம் விரும்பிய விதமாய் கத்தரித்து விட" என்ற மாதவன் கூற்று

(07 புள்ளிகள்)

(இ) • கல்வியினூடாகச் சமூகம் முன்னேறுவதை வலியுறுத்தல்.

- செல்லத்துரையின் தம்பி ராசனின் படிப்பில் அக்கறைகொள்ளல்.
  “படிக்கிறவனைப் படிக்கவிடாது தோட்டத்துக்கு இழுத்தால் அவன் எப்பிடி உருப்படப் போறான்?”
- “நாங்களெல்லாம் எவ்வளவு கஷ்ரப்பட்டாவது எங்கடை பிள்ளைகளைப் படிப்பிக்க வேணும் அப்போதுதான் எங்கடை சந்தியாவது முன்னேறி இந்த இழிநிலையை ஒழித்து விடுவர்” என்ற மாதவனின் கூற்று
- தொழிற்சங்கத்தில் இணைந்து ஸ்தாபனரீதியாக செயற்படல். (மாதவன் யாழ்ப்பாண முனிசிபல் தொழிலாளர்சங்கத்தின் செயற்குழுவில் அங்கம் வகித்தல்.)
- கிராமசங்கத் தேர்தலில் ஒடுக்கப்பட்டோரின் பிரதிநிதியாகச் செல்லத்துரையன் நிற்றல்
- தேர்தலில் தோற்றாலும் அது சமூகமாற்றத்துக்கான முதற்படி என்று கம்யூனிஸ்ட் குமாரசாமி முதலியோர் ஆறுதல் கூறுதல்.
- தேசிய நடவடிக்கைகளிலும் தம்மை இணைத்தல். (பாராளுமன்றத் தேர்தலில் பள்ளரும் பறையரும் கம்யூனிஸ்ட் பாலசிங்கத்தை ஆதரித்தல்.)
- இறுதியாக வெற்றி பெற்று அதிகாரங்களை நமதாக்கிக் கொள்ளுவோம் என்ற மனோதிடம். “ஆயிரக்கணக்கான வருஷங்களாக மனிதன் அடிமைத்தனத்திலிருந்து போராடிக்கொண்டிருக்கின்றான். நல்லானைப்போல இலட்சக்கணக்கானோரைப் பலிகொடுத்துத்தான் அடிமையினம் வளர்ந்து வந்திருக்கின்றது. இந்த நீண்டபயணத்திலே இந்த எலக்சன் ஒரு மைல்கல். இதோடை நாங்கள் ஓயப்போறதில்லை. இந்த மனிதசாதியின் அடிமைத்தனத்தை எண்டைக்கோ ஒழிக்கத்தான் போறம்” (மாதவன் கூற்று)

(06 புள்ளிகள்)

(07 + 07 + 06= 20 புள்ளிகள்)

**7 ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.**




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 40%
06 - 10 ஆயிடையில் 40%
11 - 15 ஆயிடையில் 17%
16 - 20 ஆயிடையில் 3%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா 3 உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று உபபிரிவுகளுமே இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- நாவல் பற்றிய பூரணவிளக்கமின்மை.
- நாவல் விசாலமான பரப்பு என்பதால் பரீட்சார்த்திகள் முழுமையாக உள்வாங்கி விடையளிக்க இடர்ப்பட்டமை.
- வினாக்களுக்கு சுருக்கக்குறிப்பாக விடையளித்தமை.
- மேற்கோள்கள்காட்டி விடையளிக்கத் தவறியமை.
- பாத்திரங்களின் இயல்புகள், மனவெழுச்சிகள் பற்றிய தெளிவின்மை.
- கதாபாத்திரங்களின் உணர்வுகளை நாவலாசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என்பது பற்றிய தெளிவின்மை.
- சமூகத்தின் விடுதலை அல்லது முன்னேற்றம் கல்வியிலே தங்கியுள்ளது என்ற தொனிப்பொருளை விளங்கிக்கொள்ளாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- நாவலைப் பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு வழிப்படுத்தல்.
  - இரசனையுடன் வாசித்தல்
  - வாசிக்கும்போதே சுருக்கக்குறிப்பு எடுத்தல்.
  - கதாபாத்திரமாக ஒன்றித்து (பாவனை) வாசித்தல்.
  - ஒப்படைகள் மூலமாக சுயமாக விடைகளைக் காணச்செய்தல்.
- வினாக்களுக்குப் பொருத்தமான முறையில் விளக்கமாக விடையெழுத நெறிப்படுத்தல்.
  - உரைச்சித்திர வடிவில் கதாபாத்திரமாகப் பாவனைசெய்து கருத்துக்களை முன்வைக்கச் செய்தல்.
  - வினாக்களுக்கு விடையெழுதி முன்வைக்கச் செய்தல்.
  - பொருத்தமான மேற்கோள்களை எடுத்துக்காட்டி விடையெழுத வழிப்படுத்தல்.
- பாத்திரங்களின் பண்புகள், மனவெழுச்சிகள் என்பவற்றைக் குழுவாகக் கலந்துரையாடி முன்வைக்கத் தூண்டுதல்.
- நாவலின் மையக்கருத்தையும் அதனை நிலைநிறுத்துவதற்கு நாவலாசிரியர் கையாண்டுள்ள துணைக்கருத்துக்களையும் முன்வைக்க வழிப்படுத்தல்.

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **சிலப்பதிகாரம்** துன்பமாலையில் கணவன் அநீதியாகக் கொலையுண்டதை அறிந்த கண்ணகியின் ஆவேசம் வெளிப்படுமாறு

(ஆ) புரட்சிக்கமாலின் **என் இறைவன்** என்ற கவிதையில் வெளிப்படும் இறைவனின் வல்லமைகள்

(இ) **தாய்** சிறுகதையில் வெளிப்படும் நம்பிக்கெட்ட தாயின் அவலம்

(ஈ) **மீண்டும் தொடங்கும் மிடுக்கு** என்ற கவிதையில் பேரழிவு கண்டு தளராத விவசாயியின் ஓர்மம் வெளிப்படுமாறு **(20 புள்ளிகள்)**

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

8. (அ) கண்ணகியின் ஆவேசம்

- கணவன் இறந்தசெய்தியை அறிந்ததும் கண்ணகி பொங்கியெழுதல்.
- ஒளிபொருந்திய சந்திரன் முகிலோடே சேர்ந்து நிலத்திலே விழுந்ததுபோல விழுந்து எழுதல்
- சிவந்தகண்கள் மேலும் சிவப்பேற அழுது, ஏங்கிஏங்கிக் கணவனை அழைத்தல்
- கணவனிறக்க, துன்பமடைந்து வருந்துகின்ற பிறபெண்களைப் போலப் பாண்டியமன்னன் செய்ததவறினால் அவலங்கொண்டு அழிவேனோ எனல்.
- கணவனை இழந்து ஏங்கிப் புண்ணிய தீர்த்தங்கள் பலவற்றிலும் நீராடித் துன்பமடையும் பிறபெண்களைப் போல யானும் மனங்கலங்கி அழிவேனோ எனல்.
- கணவனிறக்க, கைம்மை நோன்பு நோற்கும் பிற மகளிரைப்போல இப்பிறவியில் புகழைநீக்கி பழியோடு ஏக்கமுற்று யானும் அழிவேனோ எனல்
- அறக்கடவுளைக் கண்டித்து எல்லோரும் கேட்கும்படியாகச் சூரியனைநோக்கி, 'என் கணவன் கள்வனோ' எனக்கேட்டல்.

(10 புள்ளிகள்)

(ஆ) இறைவனின் வல்லமைகள்

- மாந்தர்களின் நாவில் இனியமொழியை வைத்தவன்
- உரவோன்
- ஒரு சொல்லாலே உலகைக்காப்பவன்
- தனித்து உலகை ஆட்சிசெய்பவன்
- ஒன்றைக்கொண்டு மற்றொன்றை ஆக்கி உலகை ஆக்கியவன்
- தன்னில்தான் தங்கியிருப்பவன்
- சிறுதுரும்பைக் கொண்டே பெருந்துன்பம் ஆக்கக்கூடியவன்.
- அவனது வல்லமையை யாராலும் அளவிட முடியாது.

(10 புள்ளிகள்)

(இ) தாயின் அவலம்

- கஷ்டப்பட்டு மகளைப் படிப்பிக்கின்ற தாய் அவள் வாத்தியாரானதும் 'காலுக்குமேல் கால் போட்டிருக்கலாம்' என்ற எதிர்பார்ப்பு
- மக்களுக்குச் சம்பளம் போதாது என்றவுடன் 'சதுரத்தைச் சாறாக புழிஞ்சென்றாலும் பணம் அனுப்புவன்' எனக்கூறி படிப்பில் கவனஞ்செலுத்தச் சொல்லும் தாய்.
- சேலைவாங்க மகள் நூறுரூபா கேட்டவுடன், அறாவட்டிக்குக் கடன்பட்டு, காதுத்தோட்டை விற்று நேரிலே கொண்டுபோய் மகளுக்கு சாப்பாடும் கொடுக்க, பல எதிர்பார்ப்புகளுடன் செல்லுதல்

- மகளின் அழகைக்கண்டு வியந்திருக்கும்போது தாயைக்கண்டதும் அவள் எரிந்துவிழ 'தெகைப்பூண்ட மிரிச்சவள் போலவும்' நின்று 'எங்கம்மா வேலைக்காரியிடம் காசைக் கொடுக்க அனுப்பியிருக்கின்றா' என்றசொல்கேட்டு, பூமிபிளந்து விழுங்கினாற் போன்ற நிலையடைதல்.
  எனக்குப் பைத்தியாமாடா?' என்று வினவுதல்.

(10 புள்ளிகள்)

(ஈ)
- பாரிய அழிவு ஏற்பட்டபின்னும் சோர்ந்துவிடாது ஓய்வில்லாத வலக்கரத்தால் மண்வெட்டி கொண்டு பழையபடி கிண்டுதல்.
- அழிவைப் பார்த்துச் சோர்வடையாமை
  "சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும் வானத்தைப் பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்"
- மீண்டும் மிடுக்குடன் ஆரம்பத்திலிருந்து தொடங்குதல்.

(10 புள்ளிகள்)
(10 + 10= 20 புள்ளிகள்)

**8 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**

**வினாவுக்குப் புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




இவ்வினா தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும். நான்கு வினாக்களில் இரண்டினைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

இதில் 00 - 05 ஆயிடையில் 17%
06 - 10 ஆயிடையில் 38%
11 - 15 ஆயிடையில் 37%
16 - 20 ஆயிடையில் 8%

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




தெரிவு வினா என்பதால் பரீட்சார்த்திகளில் 87%, ஆனோர் இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். ஆயினும் திருப்திகரமான துலங்கல் கிடைக்கவில்லை.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினாக்களில் அழுத்தம் கொடுக்கவேண்டிய முதன்மைச் சொற்பிரயோகங்களை இனங்காணாமை. எடுத்துக்காட்டாக :
  - கண்ணகியின் **ஆவேசம்**
  - நம்பிக்கெட்ட தாயின் **அவலம்**
  - பேரழிவு கண்டு தளராத விவசாயியின் **ஓர்மம்**
- பொருத்தமான மேற்கோள்காட்டி எழுதத்தவறியமை.
- சுருக்கமாக விடையளித்தமை
- கேட்கப்பட்ட வினாவுக்கு அப்பால்சென்று விடையளித்தமை
  - கதையின்பகுதியை முழுமையாக எழுதியமை

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- வினாக்களில் அழுத்தம் கொடுக்கவேண்டிய இடங்களை இனங்கண்டு எழுதவழிப்படுத்தல்.
- வினாவிற்கேற்ப, பொருத்தமான மேற்கோள்காட்டி விடையளிக்க நெறிப்படுத்தல்
- தெரிவுசெய்யப்பட்ட வினாக்களுக்கு விளக்கமாக விடையை முன்வைக்கத் தூண்டுதல்.
- வினாவை நன்கு அவதானித்து கேட்கப்பட்ட எல்லைக்குள் நின்று விடையளிக்க வழிப்படுத்தல்.

### 2.1.3 வினாப்பத்திரம் I இற்கு விடையளித்தமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்

- விதிக்கப்பட்ட பாடப்பரப்புக்குள் இருந்தே வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
- செய்யுள், உரைநடைப்பகுதிகளிலிருந்து இவ்வினாத்தாளுக்கான வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.
- இலக்கியங்கள் தோன்றிய பின்னணி பற்றிய விளக்கமின்றி மாணவர்கள் சிலர் விடையளித்துள்ளமையால் முதலில் இலக்கியங்கள் எழுந்த காலப்பின்னணி பற்றிய தெளிவினை ஏற்படுத்துதல் பயனுடையதாகும்.
- நயந்து விடையெழுதும் தன்மை இவ்வினாத்தாளுக்கான விடைகளில் குறைவாயிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனவே, இரசனையைத் தூண்டக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் முறையியலை வடிவமைப்பது பயனளிப்பதாக அமையும்.
- வினாக்களுக்கு பொதுவாக விடையளிக்கும் தன்மையை மாற்றி, வினாக்களுக்கான சுட்டிப்பான விடைகளைப் பொருத்தமான மேற்கோள்களுடன் எழுதுவதற்குப் பயிற்சியளித்தல் இன்றியமையாததாகும்.
- வினாக்களில் காணப்படும் "புலப்படுமாறு", "வெளிப்படுமாறு", "சித்தரிக்கப்படுமாறு" போன்ற தொடர்களின் பொருளறிந்து அதற்கேற்ப விடையளிக்க வழிப்படுத்துதல் வேண்டும்.
- மாணவர்களின் சுயசிந்தனை வெளிப்பாட்டுக்காகவும் மொழிப்பயன்பாட்டை விருத்தி செய்வதற்காகவும் போதியளவு எழுத்துப் பயிற்சியை வழங்க வேண்டியது இன்றியமையாததாகும்.
- அணிகள், உணர்ச்சிவெளிப்பாடு, பாத்திரப்பண்புகள், கவியாற்றல், மொழிக்கையாட்சி தொடர்பான பல்வேறு வினாக்கள் மூலமான பயிற்சி, மாணவர்களின் விடையளிக்குந்திறனை விருத்தி செய்வதற்குத் துணையாக இருக்கும்.

## 2.2 வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

- நேரம் 03 மணித்தியாலம் மொத்தம் 100 புள்ளிகள்
- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

  பகுதி I :- 03 கட்டாய வினாக்களைக் கொண்டது.

  பகுதி II :- “அ” பிரிவிலிருந்து ஒரு வினாவிற்கும்
  “ஆ” பிரிவிலிருந்து ஒரு வினாவுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

## 2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள் புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும், முடிவுகளும்

### பகுதி I

**1.** (அ) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அரை உயிர் எழுத்துகள்
(1) ட், ண் (2) இ, எ (3) ய், வ் (4) ச், ஞ் (5) இ, உ (……)

1.2 பின்வருவனவற்றுள் ஈரிதழ் மூக்கொலி
(1) ப் (2) ம் (3) வ் (4) ங் (5) ஞ் (……)

1.3 உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் இடம்பெற்றுள்ள சொல்
(1) கொலுசு (2) நாக்கு (3) மருந்து (4) அது (5) ஆடு (……)

1.4 சொல்லின் இடையில் இரட்டித்து **வராத** எழுத்து
(1) க் (2) ம் (3) ள் (4) ப் (5) ழ் (……)

1.5 வருமொழியின் முதலில் வரும் வல்லினம் **மிகாது** புணரக்கூடிய சொல்
(1) செய்ய (2) அடங்கா (3) எந்த (4) புதிய (5) அப்படி (……)

1.6 தோன்றல் விகாரம் இடம்பெற்றுப் புணர்ந்துள்ள சொல்
(1) மக்களை (2) மண்ணால் (3) பழஞ்சோறு (4) மரவேர் (5) படங்கள் (……)

1.7 பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி இடம்பெற்ற சொல்
(1) வானொலி (2) கைவிடு (3) அமைச்சர்கள்
(4) படகோட்டிகள் (5) அமைச்சரவை (……)

1.8 பின்வருவனவற்றுள் மரியாதை ஒருமை உணர்த்தும் பெயர்
(1) இருவர் (2) மாமிமார் (3) ஒருவர் (4) ஞானி (5) ஞானியர் (……)

1.9 பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
(1) சிரிப்பு (2) சான்றோர் (3) சுடுசோறு (4) பலசாலி (5) கருணை (……)

1.10 இராமன் சீதையைக் கைப்பிடித்தான். - இவ்வாக்கியத்தில் 'கைப்பிடி' என்பது
(1) கூட்டுப்பெயர் (2) ஏவல்வினை (3) முதல்வினை
(4) துணைவினை (5) மரபுத்தொடர் (……)

1.11 துன்ப நினைவுகளிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. - இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வேற்றுமைகளின் பொருள், முறையே

(1) நீங்கல், கருவி (2) இடம், கருவி (3) நீங்கல், கருத்தா
(4) இடம், காரணம் (5) எல்லை, காரணம் (……)

1.12 விகுதியால் காலம் உணர்த்தும் வினைச்சொல்

(1) நடந்தான் (2) செய்த (3) ஓடுவாய்
(4) ஓடுகின்றது (5) செய்யும் (……)

1.13 வைதற் பொருளில் அமைந்த வியங்கோள் வினை இடம்பெற்ற தொடர்

(1) கெடுக என் ஆயுள் (2) நின் புகழ் ஓங்குக
(3) வாழ்க வையகம் (4) இன்பம் மலர்க
(5) வையகம் துயர் தீர்க (……)

1.14 சிறிய, வண்ணவண்ண, பென்னம்பெரிய என்பன

(1) பெயரெச்சம் (2) வினையெச்சம் (3) வினையடை
(4) பெயரடை (5) அளவுப்பெயர் (……)

1.15 மலையிலிருந்து கீழே வீழ்ந்த வெண்ணிற அருவி வளைந்து நெழிந்து சலசலவென்று ஓடியது. - இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வினையடை

(1) வீழ்ந்த (2) நெழிந்து (3) சலசலவென்று
(4) வளைந்து (5) வெண்ணிற (……)

1.16 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் **குன்றா** வாக்கியம்

(1) நான் விடுமுறையின்போது ஊருக்குச் சென்றேன்.
(2) நான் நண்பனுக்குக் கடிதம் எழுதினேன்.
(3) தினமும் பாடசாலைக்கு நடந்து செல்வேன்.
(4) அப்பா அடுத்தமாதம் ஊருக்கு வருகிறார்.
(5) இன்று ஊரிலிருந்து திரும்புகிறேன். (……)

1.17 பின்வருவனவற்றுள் தனி வாக்கியம்

(1) காந்தனும் கமாலும் மிக நெருக்கமான நண்பர்கள்.
(2) நானும் கண்ணனும் பாடசாலைக்குச் சென்றோம்.
(3) காந்தன் வகுப்பறையில் அல்லது நூலகத்தில் இருப்பான்.
(4) காந்தன் பல்கலைக்கழகத்துக்கும் கமால் வேலைக்கும் சென்று வருகிறார்கள்.
(5) கமால் தான் படிக்க வேண்டும் அல்லது தொழில் பார்க்க வேண்டும் எனக் கருதினான். (……)

1.18 பின்வருவனவற்றுள் 'அல்ல' என்ற சொல்லைக் கொண்டு **எதிர்மறை** வாக்கியமாக மாற்றத்தக்கது

(1) என்னிடம் அந்தப் புத்தகம் உள்ளது.
(2) என்னிடம் அந்தப் புத்தகம் இருந்தது.
(3) நான் அந்தப் புத்தகத்தைப் படிக்கிறேன்.
(4) அவன் அந்தப் புத்தகத்தைப் படித்தால் முன்னேறுவான்.
(5) எனது அபிப்பிராயத்தின்படி அது நல்ல புத்தகம். (……)

1.19 அந்த நடுநிசியில் மனிதர் ஒருவரும் நடமாடவில்லை. - இவ் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'உம்' இடைச் சொல்லுக்குப் பதிலாக இடம்பெறத்தக்க வேறு இடைச் சொற்கள்

(1) ஏ, ஆ (2) தான், ஓ (3) மட்டும், ஏ
(4) கூட, ஆவது (5) தான், ஆல் (……)

1.20 பின்வருவனவற்றுள் 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவத்தால் இணைக்கக்கூடிய முற்று வாக்கியங்களின் தொகுதி

(1) அவன் நூலகம் செல்வான்; அவன் தேவையான புத்தகத்தைத் தேடினான்.
(2) அவன் நூலகம் சென்றான்; அவன் புத்தகம் ஒன்றை இரவல் பெற்றான்.
(3) அவள் பாடசாலை சென்றாள்; அவள் ஒழுங்காகப் படிப்பாள்.
(4) இந்தப் புத்தகம் வாசிப்பதற்கு இலகுவானது; அதை நான் இன்னும் வாசித்து முடிக்கவில்லை.
(5) அவன் தாளம் போட்டுப் பாடினான்; அவள் அந்தப் பாட்டுக்கு ஆடினாள். (……)

(20 புள்ளிகள்)

### 2.2.3 வினாப்பத்திரம் II பகுதி I எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 01. | 3 |
| 02. | 2 |
| 03. | 1 |
| 04. | 5 |
| 05. | 4 |
| 06. | 2 |
| 07. | 4 |
| 08. | 3 |
| 09. | 1 |
| 10. | 5 |
| 11. | 3 |
| 12. | 5 |
| 13. | 1 |
| 14. | 4 |
| 15. | 3 |
| 16. | 2 |
| 17. | 1 |
| 18. | 5 |
| 19. | 4 |
| 20. | 2 |
| | 1 x 20 = 20 புள்ளிகள் |

**பகுதி I "அ" இற்குரிய பல்தேர்வு வினாக்கள் அமைப்பு முறை**

| வினா இலக்கம் | விடயம் |
|---|---|
| 1, 2, 3, 4 | எழுத்து, எழுத்துக்களின் ஒலிப்பு முறை |
| 5, 6 | சொற்புணர்ச்சி |
| 7, 8, 9 | பெயர்ச்சொல் |
| 10 | மரபுப் பெயர் |
| 11 | வேற்றுமை |
| 12, 13 | வினைச்சொல் |
| 14, 15 | (பெயரடை, வினையடை) அடைமொழிகள் |
| 16, 17, 18, 19 ,20 | வாக்கியம் |

## 2.2.4 வினாப்பத்திரம் II பகுதி I எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**வினா இலக்கம் 1 “அ” (பல்தேர்வு வினாக்கள்) தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள், ஆலோசனைகள்**

- 1, 2, 3, 4 ஆம் வினாக்களுக்கு விடையளித்த வீதத்தினையும் சரியான விடையளித்தோர் வீதத்தினையும் சிதறல்களையும் நோக்கும்போது முறையே 51%, 68%, 50%, 68% ஆகக் காணப்படுவதால் பொருத்தமான வினாக்களாக அமைந்துள்ளன.

- 5 ஆம் வினாவிற்கு 28.11% ஆனவர்கள் சரியான விடையளித்திருக்கின்றனர். விடைச்சிதறலில் 22.38% ஆனவர்கள் 2ஆம் வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இது வல்லினம் மிகுதல் பற்றிய பூரண தெளிவின்மையை எடுத்துக்காட்டுகின்றது.

- 6ஆம் வினாவிற்கு 28.28% ஆனவர்களே சரியான விடையளித்துள்ளனர். பொருத்தமற்ற விடையான விடை இலக்கம் மூன்றை 42.05% ஆனவர்கள் தெரிவு செய்து இருப்பதை அவதானிக்க முடிந்தது. தோன்றல் விகாரம் பற்றிய தெளிவின்மையே இதற்குக் காரணமாகும். குறிப்பாக அகப்புணர்ச்சி பற்றிய விளக்கத்தில் தெளிவின்மையை எடுத்துக் காட்டுகின்றது.

- 7ஆம் வினாவிற்கு 18.85% ஆனோர் சரியான விடையளித்துள்ளனர். விடைச் சிதறலில் பிழையான விடைகளான 1 ஆம் விடையை 30% ஆனவர்களும் 2 ஆம் விடையை 27.54% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளனர். கூட்டுப் பெயருக்கும் கூட்டுப் பகுதிக்கும் இடையிலான வேறுபாடு பற்றிய தெளிவின்மையே இதற்குக் காரணமாகும்.

- 8ஆம் வினாவிற்குச் சரியான விடையளித்தோர் 35.90% ஆனவர்கள் ஆவர். பொருத்தமற்ற 4 ஆம் விடையினை 36.31% ஆனவர்கள் தெரிவு செய்துள்ளனர். “அர்” விகுதியினூடாக மரியாதைப் பண்பை உணர்த்தும் பெயரைக் காணத்தவறியமையே இதற்கான காரணமாகும்.

- 9ஆம் வினாவிற்கு சரியான விடையாகிய விடையிலக்கம் ஒன்றினை 29.51% ஆனவர்களும் பிழையான விடையான 3 ஆம் விடையினை 44.67% ஆனவர்கள் விடையாகத் தெரிவு செய்துள்ளனர். வினையடியாகப் பிறந்த ஆக்கப் பெயர் பற்றிய தெளிவின்மையால் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர்.

- 10ஆம் வினாவிற்குரிய சரியான விடையை 24.18% ஆனவர்கள் அளித்துள்ளனர். பிழையான 1 ஆவது விடையை 25.16% ஆனவர்களும் 4 ஆம் விடையினை 25.66% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவில் “கைப்பிடி” என்பதை மரபுத் தொடராக இனங்காணத் தவறயுள்ளனர்.

- 11ஆம் வினாவிற்கு 50.16% ஆனவர்கள் சரியான விடையினை அளித்துள்ளனர். வேற்றுமை உருபுகளைக் கண்டு அவை தரும் வேற்றுமைப் பொருள்களை இனங்காண்பதில் பரீட்சார்த்திகள் இடர்ப்பட்டுள்ளனர்.

- 12ஆம் வினாவிற்குரிய சரியான விடை இலக்கம் 5ஐ 18.77% ஆனவர்கள் தெரிவுசெய்துள்ளனர். பிழையான விடைகளான 1 ஆம் விடையை 30.66% ஆனவர்களும் 2 ஆம் விடையை 18.93% ஆனவர்களும் 4ஆம் விடையை 21.97% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளனர். விடைச் சிதறல்கள் இவ்வாறு அமைவதற்கு பகுபத உறுப்புகள் பற்றிய தெளிவின்மையும் விகுதியால் காலங்காட்டுதல் பற்றிய தெளிவின்மையுமே இதற்குக் காரணமாகும்.

- 13ஆம் வினாவிற்கு 53.93% ஆனவர்கள் சரியான விடையை அளித்துள்ளனர். வியங்கோள் வினையின் நான்கு வடிவங்களில் “வைதற்“ பொருள் பற்றிய பூரண தெளிவின்மையால் சரியான விடையளித்தோர் வீதம் அதிகரிக்கவில்லை.

- 14 ஆம் வினாவிற்கு 53.93% ஆனவர்கள் சரியான விடையளித்துள்ளனர். இருந்தும் பெயரடை பற்றிய தெளிவின்மையால் இவ்வினாவிற்கு சரியான விடையளித்தோர் வீதம் அதிகரிக்கவில்லை.

- 15 ஆம் வினாவிற்கு 47.38% ஆனவர்கள் சரியான விடையினை அளித்துள்ளனர். பிழையான விடைகளான 1ஆம் விடையை 18.20% ஆனவர்களும், 5 ஆம் விடையை 14.67% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளனர். பரீட்சார்த்திகள் சிலர் வினையடை பற்றிய தெளிவின்மையால் இடர்பட்டுள்ளனர்.

- 16ஆம் வினாவிற்கு 44.92% ஆனவர்கள் சரியான விடையினை அளித்துள்ளனர். விடைச் சிதறல்களில் 3 ஆம் விடையை 14.26% ஆனவர்களும், 4 ஆம் விடையை12.70% ஆனவர்களும் 5 ஆம் விடையை 17.95% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளனர். செயப்படுபொருள் குன்றிய, குன்றாதவாக்கியங்களை வேறுபடுத்திக்காண்பதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர்.

- 17ஆம் வினாவிற்கு 35% ஆனவர்களே சரியான விடையளித்துள்ளனர். விடைச் சிதறலில் 2ஆம் விடையினை 16.23% ஆனவர்களும், 3ஆம் விடையினை 26.97% ஆனவர்களும் 5 ஆம் விடையினை 17.05% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளனர். வாக்கியவகை பற்றிய தெளிவின்மையால் பரீட்சார்த்திகளில் பெரும்பான்மையோர் சரியான விடையளிக்கவில்லை.

- 18ஆம் வினாவிற்கு 65.98% ஆனவர்கள் சரியான விடையினை அளித்துள்ளனர்.

- 19ஆம் வினாவிற்கு 78.69% ஆனவர்கள் சரியான விடையினை அளித்துள்ளனர். இவ்வினா இலகுதன்மை கூடிய வினாவாக அமைந்துள்ளது,

- 20ஆம் வினாவிற்கு 22.62% ஆனவர்கள் சரியான விடையினை அளித்துள்ளனர். விடைச் சிதறலில் 3 ஆம் விடையை 17.95% ஆனவர்களும், 4 ஆம் விடையை 21.39% ஆனவர்களும், 5 ஆம் விடையை 26.72% ஆனவர்களும், சரியான விடைகளாகத் தெரிவு செய்துள்ளனர். “செய்து” என்னும் வாய்ப்பாட்டு வினையெச்ச வடிவத்தைப் பயன்படுத்துவதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர்.

### 2.2.5 வினாப்பத்திரம் II பகுதி I "அ" இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** | **5** | **Missing** |
| 1 | 3 | 5.41 | 20.98 | **50.90** | 6.07 | 16.56 | 0.08 |
| 2 | 2 | 3.52 | 68.2 | 4.34 | 12.70 | 11.15 | 0.08 |
| 3 | 1 | 40.49 | 19.26 | 7.38 | 15.41 | 17.13 | 0.33 |
| 4 | 5 | 2.62 | 9.51 | 16.72 | 3.44 | 67.54 | 0.16 |
| 5 | 4 | 18.93 | 22.38 | 16.72 | 28.11 | 13.28 | 0.57 |
| 6 | 2 | 11.72 | 28.28 | 42.05 | 9.84 | 7.95 | 0.16 |
| 7 | 4 | 30.00 | 27.54 | 6.39 | 18.85 | 17.05 | 0.16 |
| 8 | 3 | 1.72 | 7.95 | 35.90 | 36.31 | 17.87 | 0.25 |
| 9 | 1 | 29.51 | 4.34 | 44.67 | 18.85 | 2.46 | 0.16 |
| 10 | 5 | 25.16 | 9.34 | 15.41 | 25.66 | 24.18 | 0.25 |
| 11 | 3 | 15.82 | 5.25 | 50.16 | 13.69 | 14.51 | 0.57 |
| 12 | 5 | 30.66 | 18.93 | 9.34 | 21.97 | 18.77 | 0.33 |
| 13 | 1 | 53.93 | 11.64 | 19.02 | 6.15 | 8.61 | 0.66 |
| 14 | 4 | 14.92 | 5.00 | 10.16 | 53.93 | 15.49 | 0.49 |
| 15 | 3 | 18.2 | 11.23 | 47.38 | 8.11 | 14.67 | 0.41 |
| 16 | 2 | 9.67 | 44.92 | 14.26 | 12.70 | 17.95 | 0.49 |
| 17 | 1 | 35 | 16.23 | 26.97 | 4.34 | 17.05 | 0.41 |
| 18 | 5 | 5.08 | 9.02 | 5.90 | 13.36 | 65.98 | 0.66 |
| 19 | 4 | 5.98 | 3.52 | 8.28 | 78.69 | 3.03 | 0.49 |
| 20 | 2 | 10.16 | 22.62 | 17.95 | 21.39 | 26.72 | 1.16 |

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

## பகுதி I

**1.** (ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. உயர்திணை வினாப்பெயருக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.
2. தொழிற்பெயர் என்றால் என்ன என்பதை விளக்கி, **ஓர்** உதாரணம் தருக.
3. 'ஓடு' என்ற வினையடியாகப் பிறந்த தன்மை ஒருமை வினைமுற்றுக்கு **ஓர்** உதாரணம் தந்து, அதன் பகுபத உறுப்புகளைப் பிரித்துக்காட்டுக.
4. 'காரணவினை' என்றால் என்ன என்பதை விளக்கி **ஓர்** உதாரணம் தருக.
5. 'தற்போது நிலவும் காணிப் பிரச்சினைக்குப் பதிலாகவே இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது' என்ற வாக்கியத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லைச் சுட்டிக்காட்டி, பொருத்தமான சொல்லைக் கொண்டு வாக்கியத்தைத் திருத்தி எழுதுக. (10 புள்ளிகள்)

### எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

1. (ஆ) 1. உயர்திணை வினாப்பெயர்

எவன், யாவன்

எவள், யாவள்

யார், எவர், யாவர், எவர்கள்

(எவையேனும் இரண்டு)

2. தொழிற்பெயர்

வினையடியாகப் பிறந்து வினை நிகழ்வினை அல்லது நிகழாமையை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும்.

- இது அல், தல், த்தல், அது, மை போன்ற தொழிற்பெயர் விகுதிகளைப் பெற்று அமையும்.
- கால இடைநிலை எதிர்மறை இடைநிலை என்பவற்றைப் பெற்றோ பெறாமலோ அமையும்.

உதாரணம் : - வருதல், படித்தல், வந்தது, வந்தமை

3.

| | | | |
|---|---|---|---|
| ஓடினேன் | ஓடுகிறேன் | ஓடுகின்றேன் | ஓடுவேன் |
| ஓடு + இன் + ஏன் | ஓடு + கிறு + ஏன் | ஓடு + கின்று + ஏன் | ஓடு + வ் + ஏன் |

(ஏதேனும் ஒன்று)

4. கருத்தா தானே வினையை நிகழ்த்தாமல் வேறொருவரைக் கொண்டு நிகழ்த்தும் வினை காரணவினை எனப்படும்.
உதாரணம் : அவன் பந்தை உருட்டுவித்தான்.

5. பதிலாக
- தற்போது நிலவும் காணிப் பிரச்சினைக்குத் தீர்வாகவே இத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

(2 x 5 = 10 புள்ளிகள்)

**1 ஆம் வினாவின் அ, ஆ பகுதிகளுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




வினாப்பத்திரம் II இன் பகுதி I இலுள்ள 1 ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 30 ஆகும். (அ - 20 புள்ளிகள் ஆ-10 புள்ளிகள்)

இதில் 00 - 07 ஆயிடையில் 29%
08 - 15 ஆயிடையில் 52%
16 - 22 ஆயிடையில் 15%
23 - 30 ஆயிடையில் 4%
எனும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவிற்காக 16 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ளோர் 19% இனர் ஆவர். பரீட்சார்த்திகளுள் 81% ஆனோர் மொத்தப்புள்ளியில் அரைவாசிக்கும் குறைவான புள்ளியைப் பெற்றுள்ளனர்.




பகுதி I "ஆ" இற்குரிய உபவினாக்களுக்கு மிகக் குறைந்தளவான மாணவர்களே சரியான விடையினை அளித்துள்ளனர். உபவினா 1 இற்கு 16% ஆனோரும், உபவினா 4 இற்கு 15% ஆனோரும், உபவினா 5 இற்கு 18% ஆனோரும் விடையளித்துள்ளனர்.

**வினாப்பத்திரம் II - வினா I பகுதி அ, ஆ வினாக்களின் அமைப்பு :**

**(அ) வினா அமைப்பில் அவதானிக்கப்பட்டவை**

- எழுத்து, எழுத்துக்களின் ஒலிப்புமுறை, சொற்புணர்ச்சி, பெயர்ச்சொல்வகைகள், மரபுப்பெயர், வேற்றுமை, வினை, அடைமொழிகள், வாக்கியவகைகள், இடைச்சொல் ஆகிய இலக்கணப்பகுதிகளில் அமைந்துள்ளமை.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- எழுத்துக்களின் ஒலிப்புமுறை பற்றிய போதிய தெளிவின்மை.
- அகப்புணர்ச்சி பற்றிய தெளிவின்மை.
- கூட்டுப்பெயர், கூட்டுப்பகுதி என்பவற்றை இனங்காணாமை.
- ஆக்கப்பெயர் பற்றிய தெளிவின்மை.
- மரபுத்தொடரை இனங்காணத் தவறியமை.
- வேற்றுமைஉருபு தரும் பொருளை இனங்காண இடர்ப்பட்டமை.
- அடைமொழிகளின் வகைகளை வேறுபிரித்தறியாமை.
- வாக்கியங்களில் செயப்படுபொருளின் பிரயோகம் பற்றிய விளக்கமின்மை.
- இணைப்பிடைச் சொற்களின் பிரயோகம் பற்றிய தெளிவின்மை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- எழுத்துக்களின் ஒலிப்புமுறைகளை உச்சரிப்பு செயற்பாடுகளின் மூலம் விளக்குதல்.
- சொல் வகைப்பாடுகளை பயிற்றுவித்தல்.
- வேற்றுமைஉருபு இடம்பெறும் இடத்தைக் கொண்டு வேற்றுமைப்பொருளைக் காணும் பயிற்சிகளைக் கொடுத்தல்.
- பெயரடை, வினையடைகளின் பிரயோகத்தை வாக்கியங்களில் இனங்காணப் பயிற்றுவித்தல்.
- இணைப்பிடைச்சொற்களை வாக்கியங்களில் பிரயோகிக்க வழிப்படுத்தல்.
- பிறவினை - காரணவினை என்பவற்றுக்கிடையேயான நுண்ணிய வேறுபாட்டினை இனங்காண நெறிப்படுத்தல்.
- வினையடிகளைக் கொண்டு வெவ்வேறுபட்ட வினைமுற்றுகளை உருவாக்கும் திறன்களை வளர்த்தல்.
- வினைமுற்றுக்களைப் பகுபத உறுப்புக்களாகப் பிரித்தெழுதும் பயிற்சிகளை அதிகரித்தல்.

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆடல் பாடலோடு வளர்ந்து வருபவன் மனிதன். மற்ற வாழ்க்கைக் கூறுகளை அறிவதற்கு முன்னே, குழந்தை ஆடியும் பாடியும் வளர்ந்து வருதல் காண்கிறோம். உலகெங்கும் உள்ள எல்லா மக்களினங்களும் மிகப் பழங்காலம் முதற்கொண்டே ஆடல் பாடல் கலைகளைப் போற்றி மகிழ்ந்து வந்துள்ளன. உழைத்துக் களைத்த களைப்பு நீங்குவதற்காகவும், உள்ளத்தில் நிரம்பிய உணர்ச்சியைப் புலப்படுத்துவதற்காகவும் பழங்கால மக்கள் ஆடலையும் பாடலையும் கையாண்டு மகிழ்ந்தனர். அவ்வாறு கையாண்ட ஆடல் பாடல்களுக்கு அடிப்படைக் காரணம் பொதுவாக இருந்தும், புலப்படுத்திய உணர்ச்சிகளும் பெற்ற பயன்களும் பொதுவாக இருப்பினும், ஆடல் பாடல்களின் அமைப்பும் வளர்ச்சியும் ஒரே தன்மையாக இல்லை. நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் ஆடல் பாடல்கள் வெவ்வேறு வடிவுகள் கொண்டு வளர்ந்து அமைந்தன. உலகத்து மக்கள் எல்லோருக்கும் பசி ஒரேவகையாக இருப்பினும், உணவு என்னும் பொதுத்தேவை ஒரேவகையாக இருப்பினும், அந்தந்த நாட்டில் கிடைக்கும் உணவுப்பொருள்களின் வேறுபாட்டால், உணவு வகைகளும் உண்ணும் முறைகளும் வெவ்வேறாக அமைந்துள்ளன அல்லவா ? அவைபோலவே, நாட்டுக்கு நாடு இனத்துக்கு இனம் தட்ப வெப்பநிலை வேறுபாடுகளாலும், பழக்க வழக்க வேறுபாடுகளாலும், மொழி நாகரிக வேறுபாடுகளாலும் ஆடல் பாடல் கலைகளும் வெவ்வேறு வகையாக வளர்ந்து அமைந்தன. தமிழ்நாட்டு இசைக் கலையிலும் நாட்டியக் கலையிலும் உள்ள சிறப்பியல்புகளுக்கு அவைகள் காரணங்கள் ஆகும். அன்றியும், பல நூற்றாண்டுகளாக–இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாக–அவை தொடர்ந்து பண்பட்டு விளங்கி வருவதால், மற்ற நாட்டுக் கலைகளுக்கு இல்லாத வரலாற்றுப் பெருமையோடு தெளிவுறத் திகழ்கின்றன. கருநாடக சங்கீதம் என்றும், பரத நாட்டியம் என்றும் அக் கலைகள் இன்றும் தனிப் பெயர்கள் பெற்றுச் சிறந்து விளங்குதல் காண்கிறோம். (10 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

முரண்பாடுகளின்றி எந்தவித இயக்கமும் மாற்றமும் இல்லை எனலாம். பொதுவாக நிலவுடைமைச் சமூகத்தில் இரண்டு அடிப்படை முரண்பாடுகளைக் காணலாம். ஒன்று, நிலவுடைமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு; இரண்டாவது, நிலவுடைமையாளர்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடு ஆகும். முதல்வகைப்பட்ட முரண்பாடுகள் பெரிதும் முற்றி, கலகங்களாக வெடித்த சம்பவங்களைப் பற்றி நமக்கு சரியானதும் முழுமையானதுமான ஆவணங்கள் இல்லை. எனினும் பிற்காலச் சோழர் காலத்தில் நடந்த சில விவசாயக் கலகங்களின் மூலமாக இந்த வகையான முரண்பாட்டை விளங்கிக் கொள்ளலாம்.

நம்மிடத்து உள்ள பதிவுசெய்யப்பட்ட வரலாறுகள் எல்லாம், இரண்டாவது வகையான முரண்பாடுகளின் தொகுப்பாகும். இம்முரண்பாட்டிற்கு சில அடிப்படைக் காரணங்கள் இருந்திருக்கும். ஒரு குறிப்பிட்ட பகுதி நிலவுடைமையாளர் குழாம், தம் பகுதி சுரண்டலின் உச்ச நிலையை அடைந்தவுடன் அல்லது அந்தப் பகுதியில் உச்ச நிலை உற்பத்தி கிட்டியவுடன் வேறு பகுதிகளை வென்றடக்க வேண்டிய அவசியம் காரணமாயிருக்கலாம்; அல்லது, உற்பத்திச் சாதனமாகிய நிலத்தை மேன்மேலும் பெருக்கிக் கொண்டே போக வேண்டும் என்னும் பொருளியல் வேட்கை காரணமாயிருக்கலாம். அல்லது, நிலவுடைமையாளர் மனதில் வேர்விட்டுப் படர்ந்திருக்கும் பரம்பரைப் பெருமை பற்றிய கருத்துகளும் காரணமாயிருக்கலாம். இவை போன்ற காரணங்களினால் கடம்பர், கேரளர், பாணர், பாண்டியர், சம்புவரையர், ஹொய்சலர் ஆகிய நாட்டு நிலவுடைமையாளர் கலகங்களினால் சோழப் பேரரசு கலகலக்க ஆரம்பித்தது. இறுதியில் பாண்டியர் கைகளில் சிற்றரசாக ஒடுங்கிவிட்டது எனலாம்.

(i) நிலவுடைமைச் சமுதாயத்திற் காணப்படும் அடிப்படை முரண்பாடுகள் எவை ?

(ii) எவ்வகை முரண்பாடுகள் பற்றிய முழுமையான ஆவணங்கள் நம்மிடம் இல்லை ?

(iii) நம்மிடம் உள்ள பதிவுசெய்யப்பட்ட வரலாறுகள் எவ்வகையான முரண்பாடுகளின் தொகுப்பாக அமைகின்றன ?

(iv) நிலவுடைமையாளர்களுக்கிடையிலான முரண்பாட்டுக்குக் காரணமாய் அமைபவை எவை ?

(v) எத்தகைய முரண்பாட்டினால் சோழப் பேரரசு வீழ்ச்சிகண்டது ? (10 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

2. (அ) சுருக்கத்தில் இடம்பெற வேண்டிய பிரதான விடயங்கள்

- ஆடல், பாடல் கலைகள் உலகெங்குமுள்ள மக்கட் சமூகத்தினரால் பண்டு தொட்டே போற்றி வரப்பட்டமை.
- உழைப்பின் களைப்பு அகலவும் உள்ளத்து உணர்வுகளை நெறிப்படுத்தவும் இவை கையாளப்பட்டமை.
- எனினும் நாடுகளுக்கிடையே காணப்பட்ட வேறுபாடுகளினால் இவற்றின் வடிவங்கள் வேறுபட்டமை.
- இவ்வாறே தமிழ்நாட்டு ஆடல் பாடல்களும் வெவ்வேறு வகையாக வளர்ச்சி பெற்றமை.
- தமிழ்நாட்டில் இக்கலைகளின் பல நூற்றாண்டு கால வளர்ச்சியானது ஏனைய நாடுகளுக்கு இல்லாத வரலாற்றுப் பெருமையைக் காட்டுகின்றமை.
- இன்று இவ்விரு கலைகளும் கருநாடக சங்கீதம், பரதநாட்டியம் எனத் தனித்தனிப் பெயர்கள் பெற்றுள்ளமை.

(10 புள்ளிகள்)

(ஆ) 1. நிலவுடைமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு
நிலவுடைமையாளர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடு

2. நிலவுடைமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பற்றிய ஆவணங்கள்

3. நிலவுடைமையாளர்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளின் தொகுப்பு

4. - நிலவுடைமையாளர் குழாம் தம் பகுதி சுரண்டலின் உச்சநிலையை அடைந்தவுடன் அல்லது அந்தப் பகுதியில் உச்சநிலை உற்பத்தி கிட்டியவுடன் வேறுபகுதிகளை வென்றடக்க வேண்டிய அவசியம்.
   - உற்பத்திச் சாதனமாகிய நிலத்தை மென்மேலும் பெருக்கிக் கொண்டே போக வேண்டும் என்னும் பொருளியல் வேட்கை
   - நிலவுடைமையாளர் மனதில் வேர்விட்டுப் படர்ந்திருக்கும் பரம்பரைப் பெருமை பற்றிய கருத்து

5. நிலவுடைமையாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினால்.

($2 \times 5 = 10$ புள்ளிகள்)

**2 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




பகுதி II இல் 2ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கு அனைத்துப் பரீட்சார்த்திகளும் விடையளித்துள்ளனர். மொத்தப்புள்ளி 20 ஆகும். (அ - புள்ளிகள் 10, ஆ 10 புள்ளிகள்)
இதில் 3% ஆனோர் 00 - 05 ஆயிடையிலும்
15% ஆனோர் 06 - 10 ஆயிடையிலும்
48% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்
34% ஆனோர் 16 - 20 ஆயிடையிலும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா கட்டாயமானதாகும். இதில் "அ" பிரிவிற்கு 53% ஆனோரும் "ஆ" பிரிவின் உபபிரிவுகளாகிய

வினா (i) ⟶ 98%
வினா (ii) ⟶ 82%
வினா (iii) ⟶ 78%
வினா (iv) ⟶ 93%
வினா (v) ⟶ 64%

ஆனோர் விடையளித்துள்ளனர்.

* இதில் வினா இரண்டின் "ஆ" பகுதியில் வினாஇலக்கம் (i), (iv) ஆகியவற்றின் இலகுதன்மை முறையே 98% உம் 93% உம் ஆகும். (v) ஆம் வினாவின் இலகுதன்மை 64% ஆகும்.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

வினா 2 இல் "அ" பகுதி (சுருக்கம்)

- மையக்கருத்தை சரியாக இனங்காணாமை.
- மையக்கருத்திற்குப் பொருத்தமான துணைக்கருத்துக்களைப் பூரணமாக இனங்காணத் தவறியமை.
- சுருக்கம் எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டியவற்றை விலக்காமை.
- தரப்பட்ட உரைப்பகுதியில் உள்ள வாக்கியங்களை அவ்வாறே பார்த்து எழுதியமை.
- கருத்துக்களைத் தொகுத்து ஒழுங்கு முறையில் எழுதாமை.

வினா 2 இல் "ஆ" பகுதி (கிரகித்தல்)

- இவ்வினாவில் உபபிரிவுகள் i, ii, ii, iv, v ஆகிய 5 வினாக்களிலும் v ஆம் வினாவுக்கு 64% ஆனோர் மட்டும் விடையளித்துள்ளனர். வினாவைச் சரிவர விளங்கிக் கொண்டு விடையளிக்க 36% ஆனோர் இடர்பட்டுள்ளனர்.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

சுருக்கம் :

- உரைப்பகுதிகளை வாசித்து கிரகித்துத் துலங்க வழிப்படுத்தல்.
  (உ-ம் : பத்திரிகைச் செய்திகள், கதைகள் முதலியவற்றை வழங்கி அதன் சாராம்சத்தைச் சுருக்கிக் கூறச்செய்தல்.)
- மையக்கருத்தையும் துணைக் கருத்துக்களையும் பட்டியலிடச் செய்தல்.
- சுருக்கம் எழுதும்போது தவிர்க்க வேண்டியவற்றை அறிந்து துலங்கச் செய்தல்.
  (உ-ம் : கூறியது கூறல், எடுத்துக்காட்டுக்கள், அணிகள் முதலான இத்தகைய பயிற்சிகளை வழங்குதல்.)
- கருத்துக்களை ஒழுங்குபடுத்தி சொந்த மொழிநடையில் முன்வைக்கப் பயிற்றுவித்தல்.
  (உ-ம் : வானொலிச் செய்தியைக் கேட்டுக் கிரகித்துக் கருத்துக்களைச் சொந்த மொழிநடையில் கூறச் செய்தல்.)

கிரகித்தல் :

- உரைப்பகுதியை வாசித்துக் கிரகிக்கப் பயிற்சியளித்தல்.
- படிப்படியான செயற்பாடுகள் மூலம் சாதாரண கிரகித்தல், வேகமான கிரகித்தல், வாசித்தவுடன் கிரகித்தல் எனும் நிலைக்குப் பயிற்சியளித்தல்.
  ((உ-ம்)
  சாதாரண கிரகித்தல் - சொல் நிரல் அட்டைகளை குறித்த நேரத்தில் காட்சிப்படுத்தி சொற்களைக் கூறச் செய்தல்.)

  வேகமான கிரகித்தல் - செய்தி அறிக்கைகளை வாசித்து அல்லது கேட்டு அதன் சாராம்சத்தைக் கூறச் செய்தல். இத்தகைய செயற்பாடுகள் மூலம் மாணவர் உரைப்பகுதியினை வாசித்தவுடன் கிரகித்துத் துலங்க பயிற்சிகளின் மூலம் வழிப்படுத்தல்.

- கிரகித்தல் நுட்பங்களைக் கையாள வழிப்படுத்தல்.
  (உ-ம் : வழங்கப்படும் உரைப்பகுதிகளுக்குரிய வினாக்களை வாசித்த பின் உரைப் பகுதியை வாசித்தல்.)
- வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைச் சுட்டிப்பாகவும் தெளிவாகவும் பொருத்தமாகவும் எழுதப் பயிற்சி அளித்தல்.

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பைத் தெரிந்து, **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) மொழியும் பண்பாடும்

(ஆ) வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு

(இ) புவி வெப்பமடைதல்: காரணங்களும் விளைவுகளும்

(ஈ) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆறுமுகநாவலரின் பங்களிப்பு

(உ) 'அறிவுடையார் எல்லாம் உடையர்' (20 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

3. (அ) மொழியும் பண்பாடும்

- மனித வரலாற்றுக் கண்டுபிடிப்புகளில் மிகச் சிறந்தது மொழியாகும்.
- இது கருத்துப் பரிமாற்ற ஊடகம்; சிந்தனையின் சிறந்த கருவி.
- மொழி பண்பாட்டினை வெளிப்படுத்தும் - மொழி பண்பாட்டின் கண்ணாடி
- பண்பாட்டு வளர்ச்சியில் மொழியின் செல்வாக்கு அதகிம்
- சமூகவளர்ச்சி - இலக்கிய வளர்ச்சி - மொழி வளர்ச்சி - மொழி வளர்ச்சி என்பன ஒன்றில் ஒன்று தங்கியுள்ளமை.
- மொழி என்பது பண்பாட்டுக்காவி - சமூக விழுமியங்கள், ஆன்மிகச் சிந்தனைகள், அரசியல் முதலான

  அனைத்தும் அடுத்த சந்ததிக்கு கையளிக்கப்படுவது மொழியினாலேதான்.
- பண்பாட்டு வேறுபாடுகள் மொழியூடாகப் புலப்படும்.

(ஆ) வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு

- உலகத்தை அழகுபடுத்துவது அதன் வேறுபாடே - நீர்நிலைகள், மலைகள், தாவரங்கள், மிருகங்கள், பறவைகள் அனைத்திலும் வேறுபாடு உண்டு.
- நாட்டிற்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் காணப்படும் வேறுபாடுகள்.
- மனித சமூகத்தில் காணப்படும் பன்மைத் தன்மை அழகும் வலிமையும் உடையது.
- பல்லின மக்கள், பல் சமயத்தவர், பன்மொழி பேசுவோர் இருப்பது நாட்டுக்குப் பலமேயன்றி பலவீனமன்று.
- வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்; கல்வி சமூக சமய நிறுவனங்களின் பங்களிப்பு இதற்கு அவசியம்
- இவ்வாறு ஒற்றுமை காணின் அமைதி, சமாதானம் என்பன நிலைபெறும் உலகம் பேரழகு பெறும்.

(இ) புவி வெப்பமடைதல் : காரணங்களும் விளைவுகளும்

- அறிமுகம் - புவி வெப்படைதல் என்றால் என்ன?
- காரணங்கள் :
  - இயற்கைச் சமநிலை மனித நடவடிக்கைகளால் சீர்குலைதல்
  - பச்சை வீட்டு விளைவு - காபனீரொட்சைட் குளோரோ புளோரோ

  காபனால் வெப்பக் கதிர்கள் புவியை வந்தடைதல்
  - தொழிற்சாலைகளின் கழிவுகளால் சூழல் மாசடைந்து வருதல்.
  - போக்குவரத்துச் சாதனங்களால் சூழல் மாசடைதல்.
  - யுத்த தளபாடங்களின் பிரயோகம் (எ-டு : அணுகுண்டுப் பரிசோதனை)
  - இரசாயனப் பொருட்களின் பாவனை அதிகரிப்பு (எ-டு : விவசாயம்)

- விளைவுள்:
    - காலநிலையில் மாற்றம் (எ - டு : எல்நினோ)
    - சூழலில் ஏற்படும் பெரும் மாற்றங்கள் / பாதிப்புகள்
    - ஓசோன் படலத்தின் சிதைவு
    - நீராதாரங்கள் வற்றிப்போதல்.
    - பனிப்பாறைகள் உருகுதல் இதனால் கடல் மட்டம் உயருதல்.
    - தாழ்நிலங்களில் வெள்ளமேற்படல்.

(ஈ) **தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆறுமுகநாவலரின் பங்களிப்பு**

- வசனநடை கைவந்த வல்லாளர் என்றும் தமிழ் இலக்கிய உரைநடையின் தந்தை என்றும் போற்றப்படுபவர்.
- பொதுமக்களுக்கு ஏற்ற இலகுவான நடையைக் கையாண்டமை.
- செய்யுள் இலக்கியங்களை வசன வடிவில் எழுதியமை.
  உ-ம்: திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம்
- பாட நூல்களுக்கேற்ற வகையில் எளிமையான உரைநடையைக் கையாண்டமை
  உ-ம்: பாலபாடம் சைவ வினாவிடை.
- கண்டனங்களுக்கேற்ற உரைநடையைக் கையாண்டமை
- செய்யுள் உரைகளுக்கேற்ற உரைநடையைக் கையாண்டமை
  உ-ம்: திருமுருகாற்றுப்படை, நன்னூல் காண்டிகையுரை
- கடின சந்தி விகாரங்களைத் தவிர்த்தமை.
- நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தியமை.

(உ) **அறிவுடையார் எல்லாம் உடையர்**

- கூற்றின் விளக்கம் - அறிவுடையார் எல்லா நன்மையும் உடையவர்
- எத்தகைய செல்வங்கள் வந்தபோதிலும் அறிவிலார் எதுவுமே இல்லாதவர்.
- அறிவு நம்மை அழிவிலிருந்து காக்கவல்லது; நன்மையானவற்றைச் செய்யவைப்பது.
- அறிவுச் செல்வம் தன்னையும் காத்துப் பிறரையும் காக்கவல்லது.
- எதையும் ஆராய்ந்து செயற்படுவர் அறிவுடையவர்.
- இன்றைய அறிவுப் பொருளாதார யுகத்தில் அறிவைப் பெறுவதும் பகிர்வதும் இன்றியமையாதவை.
- அறிவைப் பெறும் வழிகள் - அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் போன்றன.
- நூலறிவைவிட அனுபவ அறிவே சிறந்தது; உலகத்தோடு ஒட்டி வாழ இது அவசியம்.

[10+6+4=20 புள்ளிகள்]

**3 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும், முடிவுகளும், ஆலோசனைகளும் :**




இவ்வினா கட்டாயவினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 20 ஆகும். தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து எழுதுதல் வேண்டும்.

இதில் 4% ஆனோர் 00 - 05 ஆயிடையிலும்
29% ஆனோர் 06 - 10 ஆயிடையிலும்
54% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்
13% ஆனோர் 16 - 20 ஆயிடையிலும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் IIஇல் வரும் இக்கட்டுரை வினா கட்டாயமானதாகும். இதில் “இ” பகுதியின் இலகுதன்மை 33% ஆகும். ஏனைய அ, ஆ, ஈ, உ ஆகிய பகுதிகள் இலகுதன்மை குறைந்தளவாக அமைந்துள்ளன.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- மொழியும் பண்பாடும்” என்ற கட்டுரையில் பண்பாட்டு வளர்ச்சியில் மொழியின் செல்வாக்கு பற்றிய விடயங்கள் பொருத்தமாக முன்வைக்கப்படாமை.
- “வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு” என்ற கட்டுரையில் தலைப்பை விளங்கிக் கொண்டு உள்ளடக்கத்தைப் பொருத்தமாக முன்வைக்கத் தவறியமை.
- “புவி வெப்பமடைதல் காரணங்களும் விளைவுகளும் என்ற தலைப்பில் , காரணங்கள், விளைவுகளை சரியாக வரையறைப்படுத்தி எழுதத் தவறியமை.
- “தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆறுமுக நாவலரின் பங்களிப்பு” என்ற தலைப்பில் “தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு” என்பதைப் பெரிதுபடுத்தாமல் நாவலரின் தமிழ்ப் பணிகள் என்ற வகையில் உள்ளடக்கத்தை முன்வைத்தமை.
- “அறிவுடையார் எல்லாம் உடையார்” என்ற தலைப்பில், அறிவுச் செல்வத்தை விளக்காமை. (நூலறிவு, அனுபவ அறிவு)

- முன்னுரை, தொடருரை, முடிவுரை என்பவை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய தெளிவின்மை
- பந்தியமைப்பில் போதிய கவனம் செலுத்தாமை.
- பந்திகளுக்கிடையில் வெற்றுக்கோடுகள் விட்டு எழுதுதல்.
- எடுத்த விடயத்தை விரித்து எழுதும் திறன் இன்மை.
- சொல் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளாமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- கட்டுரைத் தலைப்பினை புரிந்து பொருத்தமான உள்ளடக்கத்தை முன்வைக்கச் செய்தல்.
- கட்டுரைத் தலைப்புக்களை அல்லது வழிகாட்டற் குறிப்புகளைக் கொடுத்து கட்டுரையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலும் மதிப்பிடலும்.
- கட்டுரைக்கான தலைப்பினைக் கொடுத்து குழுநிலையில் சட்டகம் அமைப்பித்தல்.
- பந்திகளைத் தொடர்புற எழுதுதல், பந்திகளை விரித்தெழுதுதல் என்பன பற்றி தெளிவுறுத்துதல்.
- கட்டுரைகள் சிலவற்றைத் தெரிவு செய்து வாசிக்க வழிப்படுத்தல்.
- கட்டுரை எழுதும் நுட்பங்களை அறியவைத்தலும் பிரயோகித்தலும்.
  - மேற்கோள் காட்டுதல்
  - உதாரணம் கூறல்
  - காரண காரியத் தொடர்பு
  - குறியீட்டுப் பிரயோகம் முதலானவை.
- பல்வேறுபட்ட பொருட்பரப்புக்களை உள்ளடக்கிய தலைப்புகளை வழங்கி கட்டுரை எழுத வழிப்படுத்தல்.
  - அரசியல், சமூக, சமய, அறிவியல், தொழினுட்ப பண்பாட்டு அம்சங்கள் சார்ந்த தலைப்புக்கள்
  - நூலகப் பயன்பாட்டை வலியுறுத்துதல்.
- கட்டுரைக்கான தலைப்பைக் கொடுத்து எழுத வைத்துத் திருத்தம் செய்து கொடுத்தல், பின்னூட்டல் வழங்கல்.
- வாய்மொழி மூலமாக கட்டுரையை வெளிப்படுத்த வைத்தல்.
  - முன்னுரை
  - தொடருரை
  - முடிவுரை

## பகுதி II
### பிரிவு 'அ'

**4.** (அ) பதினெண் மேற்கணக்கு நூல்களை அவற்றின் பொருள் மரபின் அடிப்படையில் வகுத்துக்காட்டுக.
(ஆ) சங்ககால அகத்திணை இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.
(இ) **நெடுநல் வாடை**யை அகத்திணை இலக்கியம் என்று கொள்ள முடியுமா ? கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

(அ)

- **அகத்திணை நூல்கள்**
  நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை

- **புறத்திணை நூல்கள்**
  புறநானூறு, பதிற்றுப்பத்து, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம்

- **திணைவகுப்பில் கருத்து முரண்பாட்டுக்குரியவை**
  பரிபாடல், நெடுநல்வாடை

(05 புள்ளிகள்)

(ஆ)

- காதலை அடிப்படைப் பொருளாகக் கொண்டிருத்தல்.
- முதல், கரு, உரி என்பவற்றின் மூலம் அகத்திணை அனுபவங்களை வெளிப்படுத்தல்.
- பெயர் சுட்டாத் தன்மை
- கைக்கிளை, பெருந்திணை
- பெரும்பாலும் அகவற்பாவின் பயன்பாடு
- இறைச்சிப் பொருள், உள்ளுறை உவமம்
- பாத்திரங்களின் கூற்றுக்களாகப் பாடல் அமைதல்.

(05 புள்ளிகள்)

(இ)

- **புறத்திணையாகக் கொள்வதற்கான காரணங்கள்**
  - சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப்படுமாயின் காதற்பாக்களும் புறத்திணையைச் சாரும்.
  - 'வேம்பு தலையாத்த நோன் காழ் எ.்.கம்' எனப்படுவதன் மூலம் பாட்டுடைத் தலைவன் பாண்டியன் என்பது வெளிப்படுகின்றது
  - நெடுநல்வாடையில் தலைவியின் காதல் விரிவாகப் பேசப்பட்டாலும் அவ்வாறு பேசப்படுவதன் நோக்கம் தலைவனின் வீரம், ஆளுமை முதலானவற்றை உணர்த்துதலேயாகும்.
  - பாண்டியனின் வெற்றிச் சிறப்பை உணர்த்தும் வாகைத்திணை சார்ந்த நெடும்பாடல்.

- **அகத்திணையாகக் கொள்வதற்கான காரணங்கள்**
  - காதலைப் பிடுபொருளாக கொண்டமையும் தன்மை (தலைவியின் காதல் உணர்வு விரிவாகப் பேசப்படுதல்)
  - 'வேம்புதலையாத்த நோன் காழ் எ.்.கம்' எனச் சுட்டப்பட்டதே தவிர தலைவனின் பெயர் வெளிப்படையாகச் சுட்டப்படவில்லை

(05 புள்ளிகள்)

[5x3= 15 புள்ளிகள்]

**4 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




இதில் இவ்வினா விருப்பத் தெரிவு வினாவாக அமையும் இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.

இதில் 13% ஆனோர் 00 - 03 ஆயிடையிலும்
24% ஆனோர் 04 - 07 ஆயிடையிலும்
40% ஆனோர் 08- 10 ஆயிடையிலும்
23% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 63% ஆனோர் 8 இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 37% ஆனோர் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினா மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவ்வினாவின் “அ” பிரிவுக்கு 71% ஆனோரும் “ஆ” பிரிவுக்கு 73% ஆனோரும் சரியான விடையளித்துள்ளனர். ஆயினும் பிரிவு “இ” இற்கு 43% ஆனவர்கள் மாத்திரமே சரியான விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவுமட்டத்தைப்பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.:**

- சங்ககால இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபு அடிப்படையில் வகைப்படுத்துவதில் இடர்பட்டுள்ளமை.
- திணைப்பகுப்பில் கருத்து முரண்பாட்டுக்குரிய நூல்களைக் குறிப்பிட்டுக் காட்டத் தவறியமை. (பரிபாடல், நெடுநல் வாடை)
- அகத்திணைப் பண்புகளுடன் புறத்திணை இலக்கியப் பண்புகளையும் கலந்து எழுதியமை.
- அகத்திணை இலக்கியப் பண்புகளில் பிரதான பண்புகளைக் கூறத் தவறியமை.
- நெடுநல்வாடை எனும் இலக்கியம் பற்றிய தெளிவின்மை.
- நெடுநல் வாடை அகம் சரிந்தது அல்லது புறம் சார்ந்தது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்காட்டத் தவறியமை.
  (வேம்புதலையாத்த நோன்காழ் எ∴கம்)

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :**

- சங்க இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபு அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுதல்.
  உ-ம் : அட்டவணை அல்லது எண்ணக்கரு வரைபடம்
- திணைப்பகுப்பின் அடிப்படைகளை தெளிவுபடுத்தல்.
  உ-ம் : அகம், புறம்
- சங்க இலக்கியங்களின் பொருள் மரபையும் இலக்கியப் பண்புகளையும் தெளிவாக அறிந்து கொள்ள வழிப்படுத்தல்.
- நெடுநல் வாடை அகமா? புறமா? என்ற சர்ச்சைக்குரியதாவதற்குரிய காரணங்களைத் தெளிவுபடுத்துதல்.
- இவை சார்ந்தவையாக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்களைக் (ஆய்வுக்கட்டுரைகள்) காண்பித்தலும் தேடிப்பெற வழிப்படுத்தலும்.
  (இணையதளங்களின் - noolagam.com)

**5.** (அ) தமிழிலக்கிய வரலாற்றில் சோழப் பெருமன்னர் காலம் **காவிய காலம்** எனப்படுவதன் காரணத்தை விளக்குக.

(ஆ) பரணி இலக்கியத்தின் அமைப்பினை விளக்கி, சோழப் பெருமன்னர் காலத்தில் அப்பிரபந்தம் பெற்ற வளர்ச்சியினைத் தெளிவுவுறுத்துக.

(இ) கம்பனின் கவியாற்றல் பற்றிக் கருத்துரைக்குக. (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(அ)
- காப்பியங்கள் பெருந்தொகையாகத் தோன்றிய காலம் ஆதலால் சோழர் காலம் காப்பிய காலம் எனப்படுகின்றது.
  - ஐம்பெருங் காப்பியங்களுள் மூன்று : சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
  - ஐஞ்சிறு காப்பியங்கள் : யாசோதரா காவியம், சூளாமணி, நீலகேசி, உதயண குமார காவியம், நாககுமார காவியம்
- தமிழின் தலைசிறந்த காப்பியம் எனப்படும் கம்ப இராமாயணம் தோன்றிய காலம்
- காவியச் சாயலுடைய பெரியபுராணம், கந்த புராணம் என்பன தோன்றிய காலம்
- காப்பிய இலக்கணங்கள் தோற்றம் பெற்றன.
- விருத்தப்பாவின் செல்வாக்கு.
- பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என பாகுபடுத்தும் நிலை தோன்றியமை.
- பிற இலக்கியப் படைப்பாக்கங்களிலும் காவியத்தின் செல்வாக்கு ஏற்பட்டமை.

(05 புள்ளிகள்)

(ஆ) பரணி இலக்கிய அமைப்பு

- ஆயிரம் யானைகளை அமரிலே வென்ற வீரன் மேலே பாடப்படுவது
- கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது முதலிய உருப்புக்கள் அமைந்தது.
- புறப்பொருள் அமைதி தோன்ற கலித்தாழிசையில் பாடப்பெறுவது.
- போர்க்களமொன்றைப் பெற்ற பேய்கள், பரணி நாளிலே கூழ் அட்டு உண்டு மகிழ்ந்து போர்க்களத் தலைவனை வாழ்த்துவதாகப் பாடப்பெறும் இலக்கியம்.
- பேய்கள் உண்டு மகிழும் போர்க்களச் சித்திரிப்பு.

  கூளிப்பேய்களும் பாத்திரங்களாக அமைதல்.

பரணி இலக்கியத்தின் வளர்ச்சி

- பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் பெயர் பெற்ற புலவராற் பாடப்பெற்றது. கலிங்கத்துப்பரணி; இது முதலாம் குலோத்துங்க சோழன் கலிங்கத்தை வென்ற போரைப் புகழ்ந்து பாடுவது.
- ஒட்டக்கூத்தர் பாடியது தக்கயாகப்பரணி; இதில் இரண்டாம் இராசராசனின் புகழ், புராணக் கதையை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது.
- அரசர் புகழை, அவர்கள் வென்ற போர்கள் வாயிலாகக் காட்டிய பரணி இலக்கியம், பின்தக்கயாகப்பரணியிலே பழைய புராணக் கதை கூறும் போரைச் சார்த்தி, அரசர் புகழைப் பாடும் இலக்கியமாக மாற்றமுற்றது.

(05 புள்ளிகள்)

(இ) கம்பனின் கவியாற்றல்

- உயிரோட்டமான பாத்திரச் சித்திரிப்பு - மனித இயல்பை உள்ளவாறு கண்டறியும் ஆற்றல் வாய்ந்த கவிஞன்.
- உணர்ச்சிக்கேற்ற சந்த வேறுபாடு அமைய, விருத்தப்பாவை இலாவகமாகக் கையாண்ட திறன்.
- நாடக உத்தி, உரையாடல்களைச் சிறப்புற அமைத்தமை.
- சிறந்த கற்பனை வளம்.
- அணிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திய கவித்துவம்.
- மக்களுடைய பேச்சிலே பயின்றுவரும் சொல், நடை, ஓசைகளைச் சீரிய முறையிலே பயன்படுத்தியமை.
- "கவிச்சக்கரவர்த்தி" - மக்கள் மத்தியில் சிறப்பு.

(05 புள்ளிகள்)
(5x 3 = 15 புள்ளிகள்)

**5 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமையும் இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.

இதில் 33% ஆனோர் 00 - 03 ஆயிடையிலும்
36% ஆனோர் 04 - 07 ஆயிடையிலும்
26% ஆனோர் 08- 10 ஆயிடையிலும்
5% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ள இவ்வினாவின் உபபிரிவு “அ” இற்கு 48% ஆனோரும் “ஆ” இற்கு 41% ஆனோரும் “இ” இற்கு 35% ஆனோரும் விடையளித்துள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- உபபிரிவு “ஆ”, “இ” என்பவற்றை விட உபபிரிவு “அ” இற்கு ஒப்பீட்டளவில் அதிகமானோர் விடையளித்திருந்தனர்.
- பரணி இலக்கியத்தின் அமைப்பினை விளக்குவதிலும் சோழர் காலப் பரணிப் பிரபந்தம் அடைந்த வளர்ச்சியினைப் பூரணமாக வெளிப்படுத்துவதிலும் பரீட்சார்த்திகள் இடர்ப்பட்டுள்ளனர்.
- எல்லையற்ற பொருண்மையைக் கொண்டதாக கம்பனின் கவியாற்றல் அமைவதால், பொருத்தமான முறையிலே குறித்த விடையைச் சுருக்கி எழுத முடியாமை அவதானிக்கப்பட்டது.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு காலமும் பிற பெயர்களால் அழைக்கப்படுகின்ற காரணங்களை பரீட்சார்த்திகள் பூரணமாக அறிந்துகொள்ள வழிப்படுத்தல்.
  உ-ம் : ஒவ்வொரு காலமும் தனித்துவமான பெயர்களால் சுட்டப்படுவதற்கான காரணங்களைத் தேடித் தொகுத்து முன்வைப்புச் செய்தல்.
- ஒவ்வொருகாலத்திலும் எழுந்தஇலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் பற்றியதெளிவினை ஏற்படுத்துதல்.
- ஒவ்வொருகாலத்திலும் போற்றப்படும் இலக்கியஆளுமையாளர்கள் பற்றிய முழுமையான பார்வையினை ஏற்படுத்துதல்.

6. (அ) ஐரோப்பியர் தொடர்பால் தமிழிலக்கியப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்டுக.
(ஆ) தமிழிலக்கிய வரலாற்றில் வீரமாமுனிவர் பெறும் இடத்தினை மதிப்பிடுக.
(இ) இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க்கவிதைப் போக்கில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

6. (அ)

- காலங்காலமாக கடவுளையும் புரவலர்களையும் காதல் முதலானவற்றையும் பொருளாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் மரபு மாறி, சாதாரண பொதுமக்களையும் அவர்களது பிரச்சினைகளையும் பற்றிப் பேசுவனவாக இலக்கியங்கள் தோற்றம்பெறல்.
- செய்யுள் வடிவத்துக்கு இருந்த செல்வாக்குக் குறைந்து, வசனநடை முதன்மை பெறல்.
- நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை முதலான புதிய இலக்கிய வடிவங்கள் செல்வாக்குப் பெறல்.
- மொழியின் எளிமை கருத்திற் கொள்ளப்பெறல்.
- பேச்சு வழக்குகளும் இலக்கியங்களில் இடம்பெறல்
- சமயதத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலைமாறி, காந்தியம், மார்க்சியம் முதலான சமூக தத்துவங்கள் முதன்மை பெறல்.
- இலக்கியம் தொடர்பான மேல்நாட்டுச் சிந்தனைகளும் விமர்சன மரபுகளும் செல்வாக்குப் பெறல்.

(05 புள்ளிகள்)

(ஆ)

- தமிழ்க் காவிய மரபில் கிறிஸ்தவ சமய சார்பான காவியம் ஒன்றை (தேம்பாவணி) முதன்முதல் உருவாக்கியமை.
- கிறிஸ்தவம் சார்பான பிரபந்தங்களைப் படைத்தமை. (திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை முதலானவை)
- தமிழ் உரைநடையை ஆக்க இலக்கியம் படைப்பதற்குப் பயன்படுத்துவதற்கு முன்னோடியாக விளங்கியமை.
- நல்லதொரு அங்கத இலக்கியத்தைத் தந்தமை. (பரமார்த்தகுரு கதை)
- மொழிபெயர்ப்பு
- இலக்கிய முயற்சி, தமிழ்க்கல்வி என்பவற்றுக்குத் துணையான கருவி நூலாக, தமிழில் அகராதியை (சதுரகராதி) முதன்முதலாக உருவாக்கியமை.

(05 புள்ளிகள்)

(இ)

- சமூகப் பிரச்சினைகள், பொதுமக்கள் சார்பான விடயங்கள் பாடு பொருளாதல்
  - தேசிய விடுதலை உணர்வு
  - மொழி உணர்வு, இன உணர்வு
  - சமூக சீர்திருத்தம் (சாதிபேதம், சமயபேதம், வர்க்கபேதம், பெண்ணடிமைத்தனம் முதலானவற்றுக்கு எதிரான நோக்கு)
  - மானிட உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்.
- சாதாரண மக்களுக்கேற்ற சிந்து முதலான செய்யுள் வடிவங்களைக் கையாளல்
- புதுக்கவிதையின் தோற்றம்
- மொழி எளிமை
- பழைய இலக்கிய வடிவங்கள் புதிய நோக்கில் கையாளப்படல் (உ-ம்: திருப்பள்ளியெழுச்சி)
- புதிய உத்திகள் கையாளப்படல்
- மொழிபெயர்ப்புகள், தழுவல்கள்

(05 புள்ளிகள்)
(05 x 3 = 15 புள்ளிகள்)

**6 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமையும் இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 58% ஆனோர் 00 - 03 ஆயிடையிலும்
31% ஆனோர் 04 - 07 ஆயிடையிலும்
10% ஆனோர் 08- 10 ஆயிடையிலும்
1% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவில் 89% ஆனோர் 7 புள்ளிகளை விட குறைவாகவும் 11% ஆனோரால் 8 தொடக்கம் 15 புள்ளிகள் வரையும் பெற்றுள்ளனர்.




மூன்று உபபிரிவுகளைக் கொண்ட இவ் வினாவின் "(இ)" உபபிரிவுக்கு எந்தப் பரீட்சார்த்தியும் விடையளிக்க எத்தனிக்கவில்லை. "(அ), (ஆ)" ஆகிய உபபிரிவுகளுக்கு முறையே 27%, 27% ஆனோர் விடையளித்துள்ளனர். இவ்வினா இலகுதன்மை குறைந்த வினாவாகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- காலத்திற்குக் காலம் இலக்கியம் படைக்கும் மரபு மாறி வந்தமை பற்றிய பூரண விளக்கமின்மை.
- சாதாரண பொதுமக்களையும் அவர்களது பிரச்சினைகளையும் பேசுவனவாக எழுந்த இலக்கியங்களின் தோற்றம் பற்றி விளங்கிக் கொள்ளாமை.
- புதிய இலக்கிய வடிவங்கள் செல்வாக்குப் பெறுவதை அறிந்து கொள்ளாமை.
- சமய தத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலைமாறி, காந்தியம், மார்க்சியம் முதலான சமூகத் தத்துவங்கள் முதன்மை பெறுவதைக் கண்டு கொள்ளாமை.
- உரைநடை இலக்கியம் தொடர்பான மேனாட்டுச் சிந்தனைகளும் விமர்சன மரபுகளும் செல்வாக்குப் பெறுவதை விடைகளில் சேர்த்துக் கொள்ளாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- இலக்கியம் படைப்பதில் ஏற்படும் மரபுநிலை மாற்றங்களை காலரீதியாக அட்டவணை மூலம் விளங்க வைத்தல்.
- ஐரோப்பியர் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களின் தனித்துவப் பண்புகளை நிரற்படுத்த வைத்தல்.
- ஐரோப்பியர் கால இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்தலும் இனங்காண வைத்தலும்.
- தமிழ் உரைநடை ஆக்க இலக்கியம் படைப்பதற்கான முன்னோடிகள் பற்றிய சிறுகுறிப்புக்களை எழுதவைத்தல.
- 20 ஆம் நூற்றாண்டில் கவிதைப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களை பட்டியற்படுத்த வைத்தல்.

**பிரிவு 'ஆ'**

**7.** இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் எழுந்த நூல்களை மேல்வரும் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்குக.

(அ) கிறிஸ்தவ சமயச் சார்பானவை

(ஆ) இந்து சமயச் சார்பானவை

(இ) பிரபுக்கள் புகழ்பாடுபவை (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

**(அ) கிறிஸ்தவ சமயச் சார்பானவை**

வியாகுலப்பிரசங்கம் - யாக்கோமே கொன்சல்வேஸ்

திருச்செல்வர் அம்மானை<br>திருச்செல்வர் காவியம் } பூலோகசிங்க முதலியார் (அருளப்ப நாவலர்)

யோசேப்புப் பராணம் - கூழங்கைத் தம்பிரான்

(05 புள்ளிகள்)

**(ஆ) இந்துசமயச் சார்பானவை**

பிள்ளையார் கதை<br>சிவராத்திரி புராணம்<br>ஏகாதசிப் புராணம் } சுன்னாகம் வரதபண்டிதர்

பஞ்சவன்னத்தூது - இணுவைச் சின்னத்தம்பிப் புலவர்<br>புலியூரந்தாதி – மாதகல் மயில்வாகனப் புலவர்<br>வெருகல் சித்திரவேலாயுதர் காதல் - வீரக்கோன் முதலி

பறாளைவிநாயகர் பள்ளு<br>மறைசையந்தாதி<br>கல்வளையந்தாதி } நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

(05 புள்ளிகள்)

**(இ) பிரபுக்கள் புகழ்பாடுபவை**

கரவை வேலன் கோவை – நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்<br>தண்டிகைக் கனகராயன் பள்ளு – மாவைச் சின்னக்குட்டிப் புலவர்

(05 புள்ளிகள்)<br>[5x3=15 புள்ளிகள்]

**7 வது வினாவுக்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்களும் முடிவுகளும் ஆலோசனைகளும் :**




தெரிவு வினாவாக அமைந்துள்ள இவ்வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 45% ஆனோர் 00 - 03 ஆயிடையிலும்
23% ஆனோர் 04 - 07 ஆயிடையிலும்
20% ஆனோர் 08- 10 ஆயிடையிலும்
12% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




மூன்று உபபிரிவுகளைக் கொண்டுள்ள இவ்வினாவின் உபபிரிவு (அ) இற்கு 34% ஆனோரும் (ஆ) இற்கு 44% ஆனோரும் (இ) இற்கு 43% ஆனோரும் விடையளித்துள்ளனர். இவ்வினாவிற்கு 68% ஆனோர் மொத்தப்புள்ளியில் அரைப்பங்கிற்கும் குறைவாகப் பெற்றுள்ளதோடு 32% ஆனோர் அரைப்பங்கிற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைந்தளவு மாணவர்களே இவ்வினாவைத் தெரிவு செய்திருந்தனர்.
- மாணவர்களால் இலக்கியங்களை வகைப்படுத்தத் தெரிந்த போதும், விளக்கி எழுதும் திறனின்மையால் இவ்வினாவைத் தவிர்த்துள்ளனர்.
- வினாவைத் தெரிவு செய்த மாணவர்களுள் பெரும்பாலானோர் சரியான வகையிலே இலக்கியங்களை வகைப்படுத்தி இருந்தனர்.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- ஒல்லாந்தர் கால இலக்கியங்கள் பற்றிய மேலதிக தகவல்களைத் தேடுவதற்கும் முன்வைப்புச் செய்வதற்குமான சந்தர்ப்பங்களை வழங்குதல்.
- இலக்கியங்கள் பற்றி சிறுகுறிப்புகளை எழுதுவித்தல்.
- நூல்களை வகைப்படுத்திக் காட்சிப்படுத்தத் தூண்டுதல்.

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினைப்** பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) பதிப்புத்துறையில் சி. வை. தாமோதரம்பிள்ளை

(ஆ) நாடகத்துறையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

(இ) சிறுகதைத்துறையில் இலங்கையர்கோன்

(ஈ) நாவல் இலக்கியத்துறையில் சுபைர் இளங்கீரன்

(உ) கவிதைத்துறையில் நீலாவணன் (15 புள்ளிகள்)

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்.**

(அ) **பதிப்புத்துறையில் சி.வை.தாமோதரம்பிள்ளை**

- பதிப்பித்த முக்கியமான நூல்கள்
  - தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையம்
  - தொல்காப்பியம், பொருளதிகாரம்
  - தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினர்க்கினியம்
  - தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியம்
  - கலித்தொகை
  - சூளாமணி
  - வீரசோழியம்
  - இறையனார் களவியலுரை

- பதிப்புச் சிறப்புகள்
  - மூலபாடத் திறனாய்வின் முன்னோடி
  - ஆய்வுபூர்வமான பதிப்புரைகள்
  - சங்க இலக்கியப் பதிப்பு வழிகாட்டி

(ஆ) **நாடகத்துறையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை**

- நாடக நூல்கள்
  - நானாடகம்
  - இரு நாடகம்
  - சங்கிலி
  - மாணிக்கமாலை (மொழிபெயர்ப்பு)

- ஆற்றுகைக்கான மேடை நாடகங்களைத் தந்தமை
- தமிழர் சமூக, அரசியல் விடயங்களைப் பேசும் நாடகங்கள்
- யாழ்ப்பாணப் பேச்சு வழக்கைப் பதிவு செய்தமை
- பல்கலைக்கழக மட்டத்தில், நாடக எழுச்சிக்கான முன்னோடி
- இயல்புநெறி நாடகங்கள் மூலம் யாழ்ப்பாணப் பிராந்திய சமுதாய வாழ்வைச் சித்திரித்தமை
- மாணவர் பரம்பரையை நாடகத்துறையில் ஆற்றுப்படுத்தியமை

இ. **சிறுகதைத் துறையில் இலங்கையர்கோன்**

- முக்கியமான சிறுகதைகள்
  - வெள்ளிப் பாதசரம் (15 கதைகளின் தொகுதி)
- ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் மூலவர்.
- பெண் பாத்திரங்களை முதன்மைப்படுத்தியவர்.
- குடும்ப உறவுகளையும், சிக்கல்களையும் யதார்த்தபூர்வமாகச் சித்திரித்தவர்.
- யாழ்ப்பாண சமூக கலாசாரத்தைப் பிரதிபலித்தவர்.
- சமூகச் சார்பான சிறுகதைகளில், பேச்சு வழக்கைப் பொருத்தமாகக் கையாண்டவர்.
- உரையாடல்கள் வாயிலாக, சம்பவங்களை விளக்கும் ஆக்கத்திறன்.

ஈ. **நாவல் இலக்கியத் துறையில் சுபைர் இளங்கீரன்**

- முக்கியமான நாவல்கள் - நீதியே நீ கேள்
  - இங்கிருந்து எங்கே
  - சொர்க்கம் எங்கே
  - தென்றலும் புயலும்
  - அவளுக்கு ஒரு வேலை வேண்டும்.
- முற்போக்குச் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் நாவல்கள்.
- சமுதாயப் பிரச்சினைகளை ஆழமாக நோக்கிய புனைகதைகள்.
- தேசிய ஒற்றுமைக்கு முதன்மையளித்த எழுத்தாளர்

உ. **கவிதைத் துறையில் நீலவாணன்**

முக்கியமான கவிதை நூல்கள்

- வழி
- ஒத்திகை
- வேளாண்மை (காவியம்)
- மழைக்கை (பாநாடகம்)

- ஈழத்து நவீனகவிதை முன்னோடிகளுள் ஒருவர்.
- முனித இயல்புகளையும் நடத்தைகளையும் அவலங்களையும் உற்று அவதானித்து கவிதைகளில் வெளிப்படுத்தியவர்.
- கிழக்கிலங்கைப் பண்பாட்டைப் பிரதிபலித்தவர்.
- தமிழ்த்தேசிய அரசியற் கருத்துக்களை வெளிப்படுத்தியவர்.
- சமுதாய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்.
- பேச்சோசைப் பாங்கான சமூக அங்கதம்மிக்க கவிதைகள் எழுதியவர்.
- பல இளங் கவிஞர்களை உருவாக்கியவர்.

[5x3=15 புள்ளிகள்]




தெரிவு வினாவாக அமையும் 8 ஆவது வினாவிற்கான மொத்தப்புள்ளி 15 ஆகும்.
இதில் 74% ஆனோர் 00 - 03 ஆயிடையிலும்
18% ஆனோர் 04 - 07 ஆயிடையிலும்
07% ஆனோர் 08- 10 ஆயிடையிலும்
01% ஆனோர் 11 - 15 ஆயிடையிலும்

எனும் வகையில் பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவ்வினாவில் 92% ஆனோர் 7 புள்ளிகளுக்குக் குறைவாகவும் 8% ஆனோர் 8 புள்ளிகளுக்கு கூடுதலாகவும் பெற்றுள்ளனர்.




இவ்வினா ஐந்து உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் மூன்றினைத் தெரிவு செய்து எழுதுத் வேண்டும். உபபிரிவு "ஈ" 5% ஆனோரே விடையளித்துள்ளதுடன் பொதுவாக இவ் வினாவிற்கு விடையளித்த வீதம் மிகக் குறைவானதாகும்.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினவப்பட்ட தமிழ்ப் பெரியார்களின் இலக்கியப் பணிகள் குறித்த தெளிவின்மை.
- வினவப்பட்ட பெரியார்களின் குறிப்பான துறைகள் பற்றி நுணுக்கமாக அறியாமை.
- எதிர்பார்க்கப்பட்ட விடயங்களுக்கு அப்பாலும் பொதுவாகவும் எழுதியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- ஈழத்து இலக்கிய வரலாற்றில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளுக்குரிய தமிழ்ப் பெரியார்கள் ஆற்றிய பல்துறைப் பணிகள் பற்றிய தகவல்களை திரட்டுவதற்கு வழிப்படுத்தல். (உ-ம் : ஒப்படை, செயற்றிட்டம், பேச்சு, கையெழுத்துச் சஞ்சிகை என்பன மூலம் வழிப்படுத்தலாம்.)
- வினாக்களிற்குப் பொருத்தமாக விடையளிக்கப் பயிற்சி வழங்கல்.

2.2.6 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தமை தொடர்பான பொதுவான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்.

- பரீட்சார்த்திகளிடத்தில் இலக்கணம் பற்றிய அறிவு திருப்தியற்ற நிலையில் அமைந்திருப்பது அதவதானிப்புக்குரியது.
    - இலக்கணம் பற்றிய போதுமான தெளிவும் அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும்.

- கிரகித்தலோடு தொடர்பானது சுருக்கம். இவ்விரண்டிலும் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளனர். 33% ஆனவர்களே சுருக்கம் எழுதுவதில் சித்தியடைந்துள்ளனர்.
    - வாசித்துக் கிரகித்துச் சாராம்சத்தைக் கூறும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
    - கிரகித்தலில் குவிவு நிலையும் விரிவு நிலையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- கட்டுரை எழுதுவதில் போதிய பரிச்சயம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.
    - எழுதப்படும் கட்டுரைகள் திருத்தப்பட்டு வகுப்பறையில் நெறிப்படுத்தல் வேண்டும்.

- கட்டுரை எழுதுவது தொடர்பான சரியான வழிகாட்டல் வழங்கப்படல் வேண்டும்.

- தமிழிலக்கிய வரலாற்றைப் பொருத்தவரையில் தமிழ்நாட்டு இலக்கிய வரலாறு தொடர்பாக ஊக்குவிக்கப்படுவது போல ஈழத்து இலக்கிய வரலாற்றில் காணப்படவில்லை.
    - பாடத்திட்டத்திற்கு அமைவாக ஈழத்து இலக்கிய வரலாற்று நூல்களைத் தேடி மாணவர்கள் வாசிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும்.

# பகுதி III

## 3.0 விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

## 3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

**பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள்**

* விடை எழுதத் தொடங்க முன்னர் வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, கட்டாய வினாக்கள் எவை, ஒதுக்கப்பட வேண்டிய நேரம், பெறக்கூடிய மொத்தப் புள்ளிகள் என்பன பற்றிய விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் வினாக்களை நன்கு வாசித்து சரியாக விளங்கிக் கொண்ட பின் வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.
* வினாப்பத்திரம் I, II ஆகியவற்றின் பகுதி II இற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கும் போது முக்கியமான வினாக்களுக்குரிய விடைகளைப் புதிய பக்கத்தில் எழுத ஆரம்பித்தல் நன்று.
* வினாப்பத்திரம் II இன் பகுதி I இற்குரிய விடைகளை வினாவுக்கு எதிரே தரப்பட்டுள்ள அடைப்புக்குள் சரியான விடையின் இலக்கத்தை வினாப்பத்திரத்திலேயே குறிப்பிடுதல் வேண்டும்.
* வினா இலக்கம், பகுதி, உபபகுதி என்பவற்றின் குறியீடுகளைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
* ஒரு வினாவின் யாதாயினும் உபபகுதியொன்றுக்கு விடை எழுதாவிட்டால் அந்த உபபகுதிக்குரிய எழுத்து அல்லது உரோமன் இலக்கத்தை எழுதி அதற்கு எதிரே கோடு ஒன்றை இடுதல் வேண்டும்.
* கட்டாய வினாக்களுக்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டுமென்பது நீங்கள் அறிந்ததே. அதேவேளை கட்டாய வினாக்கள் தவிர்ந்த ஏனைய வினாக்கள் அனைத்தையும் ஒரு தடவை வாசித்த பின்னர் விடை எழுத நீங்கள் உத்தேசித்துள்ள வினாக்களை அடையாளமிட்டுக் கொள்க.
* வினாத்தாளில் காணப்படும் வினா இலக்க ஒழுங்குக்கமைவாக இல்லாது உங்களால் மிக நன்றாக விடை எழுதக் கூடிய வினாக்களுக்கு விடைகளை எழுதத் தொடங்குக.
* வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு வினாக்களைத் தெரிவு செய்வதுடன் மேலதிகமாக வேறு வினாக்களுக்கு விடை எழுதுவதைத் தவிர்த்துக் கொள்க.
* விடைத்தாளில் எல்லாப் பக்கங்களிலும் சுட்டெண்ணைக் குறிப்பிடுக.
* விடை எழுதும் போது நேரத்தைச் சரியாக முகாமை செய்வதில் கவனம் செலுத்துக.
* விடை எழுதுவதற்கு சிவப்பு, பச்சை நிறப் பேனைகளைப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்க.
* குறு விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்கு நீண்ட விடைகளையும், நீண்ட விடைகளை எதிர்பார்க்கப்படுவனவற்றுக்கு குறு விடைகளையும் எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
* நீண்ட விடைகள் எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்குத் தர்க்கரீதியாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் விடயங்களை முன்வைத்தல் ஏற்றதாகும்.

## 3.2 கற்றல் - கற்பித்தல் செயன்முறைகள் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

**ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள்**

* தமிழ்ப் பாடத்திற்குரிய தேர்ச்சி, தேர்ச்சி மட்டம் பாட உள்ளடக்கம் கற்றல் பெறுபேறுகள் பற்றிய தெளிவான அறிவு மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு இன்றியமையாததாகும்.

* கற்பிக்க வேண்டிய பாடப்பகுதிகள் தொடர்பான ஆழமான அறிவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேலதிக நூல்களைப் படித்தல் பயனுடையதாகும்.

* பாடத்திட்டத்திலும் ஆசிரியர் வழிகாட்டியிலும் அறிவுறுத்தப்பட்டதற்கமைய கற்பித்தல் பணியில் ஈடுபடுதல் பொருத்தமானதாகும். இவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றிய தெளிவான அறிவும் தேவைப்படும்.

* கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல் பயிற்சி கிரமமாக வழங்கப்பட்டு அவை திருத்தப்பட்டு பின்னூட்டல் வழங்குதல் அவசியமானதொன்றாகும்.

* மாணவருக்கு மொழிக்கற்பித்தலில் ஆர்வத்தைக் காட்டும் வகையில் அவர்களது ஆக்கத்திறன் விருத்திக்கான செயற்பாடுகள் வழங்கலாம். குறிப்பாக கட்டுரை, சிறுகதை, கவிதை, ஓரங்க நாடகம் போன்றவை. எழுதுவதற்கான துலங்குதல் அளித்தல் பயனுடையதாகும்.

* பரீட்சையை மட்டும் மையமாகக் கொண்டு கற்பிக்கும் முறையைத் தவிர்த்துக் கொள்வது சிறந்தது.

* ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த தகவல் தொழினுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது சாலச் சிறந்தது.

* மாணவர்களிடையே கருத்துறைக்கும் திறன், கற்பனைத் திறன், சுருக்கி எழுதும் திறன், பெருக்கும் திறன் போன்றவற்றை விருத்தி செய்ய வேண்டுமானால் நூல்நிலையப் பயன்பாடு அவசியமானதாகும்.

* கட்டுரை அமைப்பிலான வினாக்களுக்கு விடையளிக்கும்போது அறிவுறுத்தல் செயற்பாடுகளுக்கான பதங்களான விவரித்தல், விளக்குதல், ஆராய்தல் விமர்சித்தல், ஒப்பிடுதல், கருத்துரைத்தல், நியாயப்படுத்தல் தேவையானவற்றின் அர்த்தத்தை விளங்கி எழுதவேண்டுமென்பதை வலியுறுத்தல் வேண்டும்.

* உயர் தர வகுப்புகளில் தமிழ் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒன்றுகூடி மொழி கற்பித்தல் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைக் கலந்துரையாடல் நல்லது. இதற்கான ஒழுங்குகளை வலயக் கல்விப் பணிப்பாளரினால் செய்ய முடியுமாயின் சாலச் சிறந்தது.

* ஆசிரியர்கள் பாடம் தொடர்பாகத் தமக்கு ஏழும் சந்தேகங்களை சக ஆசிரியர்களையும் சேவைக்கால ஆலோசகர்களையும் துறைசார் நிபுனர்களையும் அனுகியே தீர்த்துக் கொள்ள முடியுமென்பதைக் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும்.

* ஆசிரியர்கள் பல்தேர்வு குறுவிடை, கட்டமைப்பு மற்றும் கட்டுரை வகையிலான வினாக்கள் தயாரிப்பதில் போதிய திறனைப் பெறல் அவசியம்.

* ஒப்படையைத் திருத்தும் முறை பற்றியும் பின்னூட்டல் வழங்கும் முறைபற்றியும் தெளிவான அறிவு இருத்தல் இன்றியமையாததாகும்.